# தமிழ் மொழித் தெளிவு

## இரண்டாம் புத்தகம்

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை] 1954 [விலை அணா 12

முதற் பதிப்பு—1944
ஒன்பதாம் பதிப்பு—1954

*Approved by the Text-Book Committee, Madras, for class use.*
*—Vide page 24 of the Supplement to Part I-B of the Fort St. George Gazette, dated 13th May, 1953.*

*Also approved by the Ceylon Educational Publications Board.*
*—Vide EPB No. 96, dated 13th March, 1953.*

Kabeer Printing Works, Madras. (2434)

# முகவுரை

தமிழ் மொழித் தெளிவு என்னும் பெயரிய தமிழ்ப்பாட நூல் வரிசையில் இஃது இரண்டாவதாகும். 1939-ஆம் ஆண்டில் சென்னைக் கல்வி இலாகா அதிகாரிகளால் வெளியிடப் பெற்றுள்ள பாடத்திட்டத்திற்கிணங்க இஃது அமைக்கப் பெற்றுள்ளது.

தமிழ் கற்கும் மாணவர்கள் தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி-யும் தெளிவும் பெறுவதற்கான பயிற்சி அளிப்பதே மொழிப் போதனையின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்-படையாகக் கொண்டே இந்நூல் வரிசை ஆக்கப்பெற்றுள்ளது.

இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் முதலிய பல்வகைப் பொருள்பற்றிய பாடங்கள் இதன்கண் இடம் பெற்றிருத்தலால், மாணவ, மாணவிகட்கு மொழிப் பயிற்சியோடு விஷய ஞானமும் விரிவடைவதற்கு இஃது உறுதுணையாம் என்பது ஒருதலை.

பாடத் திட்டத்திற் கண்டவாறு இதன்கண் வகுப்புக்கு இன்றி-யமையாத இலக்கண பாடங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. ஒவ்-வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள மொழிப் பயிற்சியும் இலக்கணப் பயிற்சியும் ஆசிரியர்கள் பின்னும் அத்தகைய பயிற்சி-களை ஆக்கி அளித்தற்கு மாதிரிகளாகத் தரப்பட்டவையேயாம்.

இந்நூல் வரிசை அச்சாகுங் காலத்து உடனிருந்துதவிய அன்பர் திரு. T. S. உமாபதி, M.A., L.T., அவர்களுக்கும், பதிப்பாசிரியராகிய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக !

இந்நூல் வரிசையைக் கல்வி இலாக்கா அதிகாரிகளும், பாட-சாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் மாணவ மாணவிகளுக்-குப் பயன்படுமாறு செய்து எம்மை இத்துறையில் தொண்டாற்ற ஊக்கியருள வேண்டுகிறோம்.

பிரசுரகர்த்தர்

# நன்றியுரை

இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சில கட்டுரைகளையும் பாடல்களையும் பிரசுரிக்க அன்புடன் அனுமதி அளித்த கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அறிஞர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் எங்கள் நன்றியை உரிமைப்படுத்துகிறோம்:

1. தமிழ் நாடு
   —திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

2. கொலை மறுத்தல்
   —கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

3. இராமகிருஷ்ணர்
   —வித்வான் அன்பு கணபதி அவர்கள்

4. திருக்கயிலாயகிரி யாத்திரை
   கடிதம்
   —ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை

5. வீர சிவாஜி
   —திரு. M. S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

6. மகாத்துமா காந்தியடிகளின் சுய சரிதம்
   —திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள்

7. கிராமச் சிறு கைத்தொழில்கள்
   —திரு. ஏ. எஸ். முத்தையா அவர்கள்

பிரசுரகர்த்தர்கள்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் நாடு<br>—திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள். | ... | 1 |
| 2. | தமிழ் மொழி | ... | 1 |
| 3. | திருக்குற்றால மலை | ... | 5 |
| 4. | பீஷ்மர் | ... | 9 |
| 5. | கொலை மறுத்தல்<br>—கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் | ... | 13 |
| 6. | மணிமேகலை | ... | 14 |
| 7. | இராமகிருஷ்ணர்<br>—வித்துவான் அன்பு கணபதி அவர்கள் | ... | 18 |
| 8. | செஞ்சிக்கோட்டை | ... | 22 |
| 9. | கவிச் சித்திரம்<br>—கம்ப நாட்டார் | ... | 28 |
| 10. | மீராபாய் | ... | 29 |
| 11. | கயிலாயகிரி யாத்திரை<br>—ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் | ... | 33 |
| 12. | கம்ப ராமாயணம் | ... | 40 |
| 13. | ஸ்தல சுய ஆட்சி—ஜில்லா போர்டு | ... | 43 |
| 14. | நாரை விடு தூது<br>—சத்திமுற்றப் புலவர் | ... | 47 |
| 15. | வீர சிவாஜி<br>—திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் | ... | 48 |
| 16. | வான ஊர்தியின் வரலாறு | ... | 55 |
| 17. | குர்-ஆன் | ... | 60 |
| 18. | ஆறு<br>—கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் | ... | 62 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 19. | மகாத்துமா காந்தியடிகளின் சுய சரிதம் —திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் | ... | 63 |
| 20. | சுப்பிரமணிய பாரதியார் | ... | 68 |
| 21. | கிராமச் சிறு கைத்தொழில்கள் —திரு. எஸ். முத்தையா அவர்கள் | ... | 73 |
| 22. | கடிதம் —சுவாமி விவேகானந்தர் | ... | 81 |
| 23. | கிறிஸ்து மகானின் அருள் வாக்கு | ... | 90 |
| 24. | பரதனும் குகனும் —திரு. T. S. உமாபதி அவர்கள் | ... | 93 |
| 25. | தாய்மையின் மேன்மை —வித்துவான். திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் | ... | 99 |


## செய்யுட் பாடங்கள்


| | | | |
|---|---|---|---|
| I. | நீதி | | |
| | 1. இனியவை நாற்பது | ... | 103 |
| | 2. திரிகடுகம் | ... | 104 |
| | 3. நான்மணிக் கடிகை | ... | 105 |
| | 4. ஔவையார் அறிவுரை | ... | 106 |
| II. | சதகத் திரட்டு | ... | 107 |
| III. | கதைப் பகுதி | | |
| | 1. முயல் யானையை வென்ற கதை | ... | 109 |
| | 2. குரங்கு பழி வாங்கிய கதை | ... | 111 |
| IV. | தனிப் பாடல்கள் | ... | 114 |

# தமிழ் மொழித் தெளிவு

## இரண்டாம் புத்தகம்

### 1. தமிழ் நாடு

வேங்கடமே தென்குமரி வேலைஎல்லை நாடு ;
 மேன்மைகன்னி இனிமைகனி மேன்மைமொழி நாடு ;
தேங்கமழும் பொதிகைமலை தென்றல்உமிழ் நாடு ;
 திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு ;
பூங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு ;
 பாவளர்ந்த வைகையொடு பழம்பொருநை நாடு ;
தேங்குசுனை பாங்கருவி தெளிசாரல் நாடு ;
 சிற்றேடை கால் பரந்த செய்யதமிழ் நாடே !

—திரு. வி. கலியாணசுந்தரனார்

### 2. தமிழ் மொழி

1. நமது எண்ணங்களைப் பிறர்க்குக் கூற உதவியாய் இருப்பது பாஷை. பாஷை, மொழி என்னும் சொற்கள் ஒரே பொருளை உணர்த்துவன. உலகத்தின் பற்பல பாகங்களில் வாழும் மக்களுடைய உணவு, உடை, பழக்க வழக்கங்கள் முதலியவை எங்ஙனம் மாறுபாடு உடையனவாய் இருக்கின்றனவோ, அங்ஙனமே பாஷையிலும் வேறுபாடு உண்டு. ஆங்கிலேயர் பேசுவதை ஆங்கில மொழி என்றும், கிரேக்கர் பேசுவதைக் கிரேக்க மொழி என்றும், ஆந்திரர் பேசுவதை ஆந்திர மொழி என்றும் கூறுவது போலத் தமிழராகிய நாம் பேசுவதைத் தமிழ் மொழி என்று கூறுகிறோம்.

2. தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். ஆகவே, தமிழ் மொழி என்னும் தொடர் இனிமையான பாஷை என்று பொருள்படும். வட இந்திய மக்கள் பேசி வந்த சம்ஸ்கிருத மொழியை வடமொழி என்று கூறு

வது போலத் தென்னிந்திய மக்களால் பேசப்பட்டு வரும் தமிழுக்குத் தென் மொழி என்னும் ஒரு பெயரும் உண்டு.

3. 'வேங்கடமே தென்குமரி வேலையெல்லை நாடு' என்றபடி வடக்கே திருவேங்கடம், தெற்கே குமரி முனை, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் ஆகிய எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பில் தமிழ் மொழி வழங்கி வந்தது. ஆகவே தமிழ் மொழி பேசப்பட்ட நிலப்பரப்புத் தமிழ் நாடு எனப்பட்டது. தமிழ் மொழியை பேசுபவர் தமிழர் எனப்பட்டனர். தமிழ் நாட்டில் மக்கள் எக்காலத்தில் தோன்றினார்களோ, அக்காலந் தொட்டு அங்குத் தமிழ் மொழி வழங்கி வருகிறது என்பது உண்மை. ஆனால், கால வேறுபாட்டால் அதிற் பல மாறுதல்கள் தோன்றியிருக்கலாம்.

4. பண்டைக் காலத்தில் தமிழ் நாடானது சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என மூன்று பெரும் பிரிவுகளாய் இருந்தது. அக்காலத்தில் வட நாட்டினின்றும் தென்னாடு போந்த அகத்திய முனிவர் பாண்டி நாட்டிலுள்ள பொதிய மலையில் தங்கியிருந்து, தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தார். அவர் எப்போது வந்தார் என்றும், எப்போது இலக்கணம் செய்தார் என்றும் திட்டமாகக் கூறமுடியாது. ஆனால், அவர் வருவதற்கு முன்பே தமிழ் மொழி உன்னத நிலையில் இருந்ததனாலேதான் அவர் இலக்கணம் வகுக்க முடிந்தது என்பது மட்டும் உண்மை.

5. தமிழ் மொழி தழைத்து ஓங்குவதற்குக் காரணமாய் இருந்தவை பாண்டி நாட்டில் இருந்த தமிழ்ச் சங்கங்களேயாம். அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப்படும். அகத்திய முனிவரே முதற் சங்கத்தின் தலைவராயிருந்தார். சிவபெருமானே மனித உருவந் தாங்கித் தமிழ்ச் சங்கத்தின் தலைவராயிருந்தார் என்று கூறுவாரும் உண்டு. தொல்காப்பியம் என்னும் அரிய இலக்கண நூலை இயற்றிய தொல்காப்பியர் என்பவர் இரண்டாஞ் சங்கத்தின் தலைவராயும், நக்கீரர் என்பவர் கடைச் சங்கத்தின் தலைவராயும் இருந்து தமிழை வளர்த்தார்கள்.

6. தமிழ் நாட்டின் மூவேந்தர்களும், அவர்களுக்கு அடங்கிக் கப்பங் கட்டி வந்த சிற்றரசர்களும், வள்ளல்களும்

அவர்களால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ப் புலவர்களும் தமிழ் மொழியை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்தோடு உழைத்து வந்தார்கள். தமிழ் மொழி ஆராய்ச்சிபற்றிக் கூடிய கூட்டங்களே சங்கங்கள் எனப்பட்டன.

7. மூன்று சங்கங்கள் இருந்தன என்று கூறினோம். அவற்றுள் முதற்சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் இக்காலத்தில் கிடைக்கவில்லை. அவை நீருக்கும், நெருப்புக்கும், செல்லுக்கும், அந்துக்கும் இரையாயின. இடைச்சங்க காலத்து நூல்களும் அவ்வாறே மறைந்தன. ஆயினும், அச்சங்கத்தின் தலைவராயிருந்த தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் ஒன்று மட்டும் கிடைத்துள்ளது. அதுவே தமிழில் உள்ள எல்லா நூல்களுக்கும் பழமையானது. அது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவுடையோர் கொள்கை.

8. கடைச்சங்க காலத்தில் தோன்றிய நூல்களுள் சில மட்டும் நமக்குக் கிடைத்துள்ளன. அவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன. கடைச்சங்க காலத்தையடுத்து சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங் காப்பியங்கள் தோன்றின. அவற்றுள்ளும் முதல் மூன்று மட்டுமே இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ளன.

9. அதன் பின்னர்ச் சைவ சமய குரவர்களாகிய நாயன்மார்களும், வைணவ சமயத்தைப் பரப்பிவந்த ஆழ்வார்களும் திவ்விய தேச யாத்திரை செய்து, ஆங்காங்கு இனிய பாக்களை இயற்றி இறைவனை வணங்கி வந்தார்கள். அப்பாக்களின் தொகுதிகளே தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்பவை.

10. இவர்கள் காலத்திற்குப் பிறகும் பல புலவர்கள் தோன்றித் தமிழ்த் தொண்டு புரிந்தார்கள். அவர்களுள் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், அவ்வையார், அருணகிரிநாதர், வில்லிபுத்தூரார், சேக்கிழார், பரஞ்சோதியார் என்பவர் சிறந்தவராவர்.

11. முற்காலத்திலும் பிற்காலத்திலும் இந்து சமயத்-

தவரேயன்றிப் பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய பிற சமயத்தவர்களும் இனிய பல நூல்களை இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளார்கள். பெஸ்கி, போப்பு என்னும் ஐரோப்பியரும், தமிழை நன்கு பயின்று, தமிழ் நூல்களை இயற்றியுள்ளனர். ஆனால், தமிழர்களாகிய நமக்குத் தாய்மொழியாகிய தமிழ் மொழியிடம் இருக்கவேண்டிய அளவு பற்று இல்லை. ஆதலாலேதான் தமிழ் மொழி நாளடைவில் புறக்கணிக்கப்பட்டுச் சிறிது சிறிதாகத் தன் பெருமையை இழந்து வருகின்றது. பிள்ளைகளே, இஃது எவ்வளவு இழிந்த செயல் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! இன்று முதல் உங்களுள் ஒவ்வொருவரும் ஒப்பற்ற பண்டிதராய் விளங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழைப் பயில்வீராக!

## பயிற்சி

I. விடை தருக:—

1. பாஷையின் பயன் யாது?
2. 'தமிழ் மொழி' என்னும் தொடருக்குப் பொருள் யாது?
3. 'வட மொழி' என்னும் தொடர் எப்பாஷையைக் குறிக்கும்?
4. தமிழுக்குத் 'தென் மொழி' என்னும் பெயர் வழங்கக் காரணம் என்ன?
5. பண்டைக் காலத்தில் தமிழ் மொழி வழங்கி வந்த நிலப் பகுதியின் எல்லைகள் யாவை?
6. அகத்தியர் தென்னாடு வருவதற்கு முன்பே தமிழ் மொழி உன்னத நிலையில் இருந்தது என்பதை நிச்சயிக்க முடியுமா?
7. முச்சங்கங்களுக்கும் முறையே தலைவராயிருந்தவர் யார்?
8. 'சங்கங்கள்' என்பன யாவை?
9. தமிழ் மொழியில் வழங்கும் நூல்களுள் மிக்க தொன்மை வாய்ந்தது எது?
10. கடைச் சங்க காலத்துத் தமிழ் நூல்கள் எவை?
11. ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.
12. பிற்காலப் புலவர்களுள் அறுவர் பெயர்களைக் கூறுக.
13. தமிழை வளர்க்க நாம் செய்ய வேண்டிய நன்முயற்சிகள் யாவை?

II. பொருள் கூறுக:—

மொழி, ஆந்திரம், வடமொழி, வேங்கடம், வேலை, போந்த, உன்னத நிலை, வேந்தர், கப்பம், கொள்கை, காப்பியம், சமய குரவர், புறக்கணித்தல்.

III. வாக்கியங்களில் அமைக்க :—
உன்னத நிலை, ஒப்பற்ற, கொள்கை, புறக்கணித்தல்.

## இலக்கணம்

### எழுத்து

**சுட்டெழுத்து :** அ, இ, உ என்னும் இம்மூன்றும் சுட்டெழுத்து எனப்படும். இவை சொல்லுக்கு முதலில் அகத்தே நின்று சுட்டுப் பொருளை உணர்த்துமாயின் அகச்சுட்டு எனப்படும்; சொல்லுக்கு முதலில் புறத்தே நின்று சுட்டுப்பொருளை உணர்த்துமாயின் புறச்சுட்டு எனப்படும். (அகம் - உள்ளிடம்; புறம் - வெளியிடம்) சுட்டெழுத்தைப் பிரித்துவிடின் சொல், பொருள் தராது நிற்பின் அகச்சுட்டு எனவும், பொருள் தந்து நிற்பின் புறச்சுட்டு எனவும் அறியலாம்.

**உதாரணம் :** அவன், இவன், உவன்—அகச்சுட்டு
அவ்வீடு, இம்மலை உம்மனிதன்—புறச்சுட்டு

**குறிப்பு :** உ என்னும் சுட்டெழுத்து நடுவிலேனும், மேலிடத்தேனும், பின்னிடத்தேனும் உள்ள பொருளைச் சுட்டும்.

# 3. திருக்குற்றால மலை

1. தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையின் ஓரமாக மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்குக் கடற்கரையின் ஓரமாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் வியாபித்துள்ளன. இவை இரண்டும் ஒன்றி நிற்கும் பகுதிக்கு நீலகிரி என்பது பெயர். கிழக்குத் தொடர்ச்சி மலைகள் நீலகிரியில் முடிவு பெறுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகள் நீலகிரிக்குத் தெற்கிலும் வியாபித்துள்ளன. இங்கு இத்தொடரின் பகுதிகள் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. குற்றால மலை என்பது திருநெல்வேலி ஜில்லாவில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒரு பகுதியேயாம். இது மூன்று சிகரங்களுடன் திகழ்வதால், இதற்குத் திரிகூட மலை என்னும் பெயர் வழங்கிவருகிறது.

2. இம்மலை சிற்சில இடங்களில் 3000 அடிக்கு மேல் உயர்ந்துள்ளது. இம்மலையின்மீது பச்சைக் கம்பளம் போர்த்தது போல உயர்ந்தடர்ந்த காடுகள் காட்சியளிக்கும். இக்காடுகளில் யானை, சிறுத்தை முதலிய கொடிய விலங்கு-

களும் பெரிய மலைப்பாம்புகளும் வசிக்கும். மரங்களின்மீது குரங்குகள் கிளைக்குக் கிளை தாவிக் குதித்துப் பற்பலவான தீங்கனிகளைப் பறித்துத் தின்று இன்புறும். சிற்சில இடங்-



களில் காடுகள் களையப்பட்டுத் தோட்டங்கள் தோற்றுவிக்கப்-பட்டுள்ளன. அவற்றில் ஏலம், கடுக்காய், கிராம்பு முதலியவை விளைகின்றன. திரிகூட மலையின் இயற்கை வளங்களை எடுத்துக் கூறுதல் எளிதன்று.

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும்;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்;

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும் ;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும் ;
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர் ;
வளம்பெருகுந் திரிகூட மலைஎங்கள் மலையே.''

என்று புகழ்கின்றார் இம்மலையைத் திரிகூடராசப்பக் கவிராயர் என்னும் பெரும்புலவர்.

3. குற்றால மலையினின்று போந்து மக்களை மகிழ்விக்கும் நீர்வீழ்ச்சிகளே இம்மலையின் சிறப்புகட்கெல்லாம் காரணமாம். **வட அருவி, சண்பக அருவி, தேனருவி, ஐந்தருவி** என்பன இந்நீர்வீழ்ச்சிகளின் பெயர்கள்.

4. குற்றால மலையின் அடிவாரத்தில் ஒரு சிவாலயம் இருக்கிறது. இங்குள்ள மூர்த்திக்குத் **திருக்குற்றால நாதர்** என்பதும், அம்பிகைக்குக் **குழல்வாய்மொழி யம்மையார்** என்பதும் பெயர். இக்கோவிலின் பின்புறத்தில் மலையின் மீது செல்லும் பாதை ஒன்றிருக்கிறது. அதன் மூலம் சுமார் இரண்டு மைல் தூரம் சென்றால், அங்குச் செங்குத்தான மலைச் சிகரங்களுக்கு இடையே ஒரு சிறு நீர்வீழ்ச்சி உண்டு. அது சுமார் முப்பதடி உயரத்திலிருந்து விழுகிறது. சண்பக மரக் காடுகளின் இடையில் உள்ள அதற்குச் **சண்பக அருவி** என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. அவ்வருவியின் அருகில் ஒரு சிறு கோவிலும் மண்டபமும் இருக்கின்றன. அங்குத்தான் **அகத்திய முனிவர்** எழுந்தருளி யிருப்பதாகக் கூறப்படுகின்றது. அவ்வருவியில் மக்கள் நீராடுவதுண்டு.

5. சண்பக அருவியின் அருகில் உள்ள மண்டபத்தின் பின்புறத்திலிருந்து ஓர் ஒற்றையடிப் பாதை மலையின்மேல் செல்கிறது. அதன் மூலமாகச் சுமார் இரண்டு மைல் தூரம் சென்றால், மற்றொரு நீர்வீழ்ச்சி காணப்படுகிறது. **தேன் அருவி** என்பது அதன் பெயர். அது சுமார் இருநூறு அடி உயரத்திலிருந்து விழுகிறது. அவ்வருவி விழுகின்ற இடத்தில் ஆங்காங்குத் தேனடைகள் காணப்படுவதால், அவ்வருவி தேனருவி எனப்பட்டது போலும்! அதில் நீராடுவது இயலாது. அதற்குச் செல்லும் வழியும் அபாயமானது.

6. குற்றால நாதரின் திருக்கோவிலை அடுத்து மலையடிவாரத்தில் சுமார் நூற்றைம்பது அடி உயரத்திலிருந்து

இறங்கும் நீர்வீழ்ச்சியே வட அருவி எனப்படுவது. மேலே உள்ள சண்பக அருவியின் நீரே இங்கு இப்பெயருடன் காணப்படுகிறது. இதுவே திருக்குற்றாலத்தின் பெருமைக்கெல்லாம் காரணமாயிருப்பது. இதில் நீராடுபவரின் நோய்கள் பல எளிதில் நீங்குகின்றன. இதில் நீராடுவதற்கான வசதிகள் இங்குச் செய்யப்பட்டுள்ளன. இவ்விடம் கற்பாறைகள் நிறைந்தது. அருவி நீர் பாறைகளின்மீது விழுந்து, சித்திரா நதி என்னும் பெயருடன் ஓடுகிறது.

7. குற்றால நாதர் கோவிலினின்றும் மேற்கு நோக்கி ஒரு சாலை செல்கிறது. இது மலையடிவாரத்தை ஒட்டியே அமைக்கப்பெற்றுள்ளது. இதன் வழியே சுமார் மூன்று மைல் தூரம் போனால் அடுத்தடுத்து ஐந்து இடங்களில் சுமார் முப்பது அடி உயரத்தினின்று இறங்கும் நீர்வீழ்ச்சிகளைக் காணலாம். இவைதாம் ஐந்தருவி என்பன.

8. இத்தகைய அருவிகளும், மலைகளின்மீதுள்ள செறிந்த காடுகளும், மலையடிவாரத்தில் ஆங்காங்குள்ள மா, பலா, பாக்குமரச் சோலைகளும், திருக்குற்றால நாதர் கோவிலும், திருக்குற்றால மலைக்கும் அப்பெயரினதாய ஊருக்கும் பெரும்புகழளித்துத் திகழ்கின்றன.

## பயிற்சி

I. விடை தருக :—

1. குற்றால மலைக்கு வழங்கும் வேறு பெயர் யாது? அப் பெயர் வழங்கக் காரணம் என்ன?
2. திரிகூட மலையின் சிறப்புக்களைக் கூறும் பாட்டில் உள்ள விஷயங்களைக் கூறுக.
3. குற்றால மலையிலிருந்து இழிந்து வரும் நீர் வீழ்ச்சிகள் எவை? அவற்றுள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுதுக.
4. குற்றால மலையின்மீது அகத்தியர் எழுந்தருளி யிருப்பதாகக் கூறப்படும் இடம் எது?
5. ‘சண்பக அருவி’—பெயர்க் காரணங் கூறுக.

II. எதிர்ப்பதம் கூறுக :—

ஒன்றி, கொடிய, இன்பம், மகிழ்ச்சி.

III. பொருள் தருக :—

ஒன்றி, வியாபித்துள்ளன, திகழ்வதால், திரிகூடம், விலங்கு, தீங்கனி, திரை, புனல், கிம்புரி.

IV. வாக்கியங்களில் அமைக்க :—

காட்சி, திகழ்கின்றது, மகிழ்ச்சி, எளிது, வசதி.

### இலக்கணம்

**வினாவெழுத்து:** எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினாவெழுத்துக்களாம். இவை சொல்லுக்கு அகத்தில் நின்று வினாப்பொருளைத் தருமாயின், அக வினா எனப்படும்; புறத்தே நின்று வினாப்பொருளைத் தருமாயின், புற வினா எனப்படும். (வினா - கேள்வி)

எ, யா என்னும் இரண்டெழுத்தும் சொல்லுக்கு முதலில் அகத்தும் புறத்தும் நின்று வினாப்பொருளைத் தரும்.

**உதாரணம்:** எவன்? யாவன்?—அகவினா
எக்குதிரை? யாங்ஙனம்?—புற வினா

ஆ, ஓ என்னும் இரண்டும் சொல்லுக்கு ஈற்றில் மட்டும் புறத்தே நின்று வினாப்பொருளை உணர்த்தும்.

**உதாரணம்:** இராமனா? (ஆ)
தந்தானோ? (ஓ) } இவை புற வினாவாகவே வரும்.

ஏ என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலில் அகத்திலும், சொல்லுக்கு ஈற்றில் புறத்திலும் நின்று வினாப்பொருளை உணர்த்தும்.

**உதாரணம்:** ஏவன்?—அகவினா
கண்ணனே?—புறவினா

**குறிப்பு:** 'கண்ணனே' என்பதற்குக் 'கண்ணனா' என்பது பொருள்.

## 4. பீஷ்மர்

1. பண்டு வடஇந்தியாவில் அஸ்தினாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு குருநாட்டை ஓர் அரசர் ஆட்சி புரிந்து வந்தார். சந்தனு என்பது அவர் பெயர். அவருக்கு ஒரு புதல்வர் இருந்தார். அவர் பெயர் காங்கேயர் என்பது. காங்கேயரைச் சந்தனு மன்னர் மிகுந்த அன்போடு வளர்த்து வந்தார்; அரசர்க்குரிய எல்லாக் கலைகளையும் அவருக்குப் பயிற்றுவித்தார்.

2. ஒரு நாள் சந்தனு மன்னர் வேட்டையாடுவதற்குக் காட்டுக்குச் சென்றார்; வேட்டை முடிந்த பிறகு நீர் பருக விரும்பிக் கங்கைக் கரையை அடைந்தார். அங்கு ஓர் அழகிய நங்கை ஓடம் செலுத்திக் கொண்டிருந்தாள். அவள் ஒரு வலைஞன் மகள்; சத்தியவதி என்பது அவள் பெயர். அவளது பேரழகைக் கண்ட அரசர், அவளை மணக்க விரும்பினார்; பரிசனங்களிற் சிலரைச் சத்தியவதியின் தந்தையிடம் அனுப்பித் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால், அச்செம்படவன், 'அரசருக்கு என் மகளை மணம்

செய்து கொடுப்பதில் தடை ஒன்றுமில்லை. ஆனால், அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளுக்கு அரசுரிமை கிடைக்காதே என்றுதான் யோசிக்கிறேன்,' என்றான்.

3. அவ்விஷயத்தைக் கேட்ட அரசர், தம் நலத்திற்காகத் தம் அருமைப் புதல்வருடைய அரசுரிமையையும், வாழ்க்கை இன்பத்தையும் கெடுத்துவிட விரும்பவில்லை. ஆதலால், அவர் ஒன்றும் பேசாமல் அரண்மனைக்குப் போய்விட்டார். ஆயினும், அவருக்குச் சத்தியவதியின்மீது இருந்த ஆசை மாறவில்லை. மனோ வியாதியால் அவர் உடல் நலிவடைந்தது.

4. தந்தையார் நோயுற்றிருப்பதை அறிந்த காங்கேயர், அவரிடம் சென்று, அவர் வருத்தத்திற்குக் காரணத்தை விசாரித்தார். சந்தனு மன்னர் உண்மையைக் கூறவில்லை. ஆயினும், மந்திரிகளை விசாரித்து உண்மையை அறிந்த காங்கேயர், சத்தியவதியின் தந்தையிடம் சென்றார்; சத்தியவதியைத் தம் தந்தையாருக்கு மணம் செய்து தரும்படி வேண்டினார். அவ்வலைஞன் முன் போலவே தன் மகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அரசுரிமை கிடைக்காது; ஆதலின், பெண்ணைத் தரமுடியாதென மறுத்தான்.

5. உடனே காங்கேயர் அச்செம்படவனிடம், 'ஐயா, யான் என் தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு என் அரசுரிமையை உம் மகளாரின் பிள்ளைகளுக்கே அளிப்பதாக இதோ வாக்களிக்கிறேன். இனி உமக்குத் தடை யாது?' என்றார். அது கேட்ட அவன், 'அரசிளங்குமரரே, நீர் உரைப்பது உண்மையே. நீர் உள்ளளவும் உமது உரிமையை நீர் உம் தந்தையாருக்காக விட்டுக் கொடுக்கலாம். ஆனால், உம் புத்திரர்கள் என் மகளுடைய பிள்ளைகளுடன் சண்டையிட்டு அவர்களுக்குரிய இராச்சியத்தைப் பெறாமல் விடுவார்களா?' என்றான். உடனே காங்கேயர், 'ஆம்; உண்மைதான். ஆனால், யான் என் ஆயுள் வரையிலும் மணம் செய்துகொள்வதில்லை எனச் சகலரும் அறியச் சத்தியம் செய்கிறேன்! யான் மணம் செய்துகொண்டாலன்றோ எனக்குப் பிள்ளைகள் தோன்றுவார்கள்? யான் மணம் செய்துகொள்வதில்லை. இது சத்தியம்! முக்காலும் சத்தியம்!' என்றார்.

6. காங்கேயர் சொன்ன சூளுரையைக் கேட்ட செம்படவன், அவர் விருப்பத்திற்கு இசைந்தான். சத்தியவதிக்கும், சந்தனு மன்னருக்கும் விமரிசையாகத் திருமணம் நிறைவேறியது. காங்கேயர் சத்தியவதியைத் தம் அன்னை போலப் பாவித்து வந்தார். சத்தியவதியும் காங்கேயரைத் தன் சேய் எனக் கருதி நடத்தி வந்தாள்.



7. சிறிது காலத்தில் சத்தியவதி இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அதன் பின்னர் சந்தனு மன்னர் மரணமடைந்தார். காங்கேயர் தம் வாக்கிற்கிணங்கச் சத்தியவதியின் மூத்த பிள்ளைக்குப் பட்டம் சூட்டினார். அவன் சில ஆண்டுகள் அரசு புரிந்து, பின் இறந்து விட்டான். காங்கேயர் சத்தியவதியின் இரண்டாம் பிள்ளையை அரசனாக்கினார். அவனும் விதிவசத்தால் சீக்கிரத்திலேயே உயிர் துறந்தான். அப்போது இராச்சியத்தை ஆள அரசர் இல்லாமையால், சத்தியவதியும் குடி மக்களும் காங்கேயரிடம் வந்து, அவரை முடிசூட்டிக்கொள்ளுமாறு வேண்டினார்கள். ஆயினும், அவர் தாம் கூறிய சபத மொழியினின்று மாற விரும்பவில்லை. இராச்சியத்தை யாள அரசர் இல்லாத காலத்தும், பலர் வேண்டியும் தம் வாக்கினின்றும் பிறழாத உத்தமரான காங்கேயருக்குப் **பீஷ்மர்** என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

8. பிள்ளைகளே, தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் தம் சுகத்தை வாழ்நாள் வரையில் வெறுத்த பீஷ்மரின் உத்தம குணம் எல்லாராலும் போற்றக்கூடியதல்லவா ?

## பயிற்சி

I. விடை தருக :—

1. காங்கேயர் யார் ?
2. சத்தியவதி யார் ?
3. வலைஞன் சத்தியவதியைச் சந்தனு மன்னருக்கு மணம் செய்விக்க மறுத்ததற்குக் காரணம் யாது ?
4. காங்கேயர் செம்படவனுக்குத் தந்த சத்தியமொழி யாது ?
5. காங்கேயருக்குப் பீஷ்மர் என்னும் பெயர் வழங்கக் காரணம் யாது ?

II. பொருள் தருக :—

கலைகள், பருக, நங்கை, வலைஞன், பரிசனங்கள், உரிமை, நலிவடைந்து, சூளுரை, உயிர் துறந்தான்.

III. 1. முதல் பத்தியிலுள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.

2. இரண்டாம் பத்தியிலுள்ள முதலிரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.

IV. சத்தியவதி ஓடம் செலுத்தினாள். இவ்வாக்கியத்தை 'ஓடம்' என்னும் சொல்லைக்கொண்டு தொடங்குக.

## இலக்கணம்

**இனவெழுத்து :** பிறப்பு, அளவு, வடிவு முதலியவற்றால் ஒருவாறு ஒத்திருக்கும் எழுத்துக்கள் ஒன்றுக்கொன்று இனம் என்று கூறப்படும்.

உயிர் எழுத்துக்கள் :

| | | | |
|---|---|---|---|
| அ - ஆ | உ - ஊ | ஐ - இ | ஔ - உ |
| இ - ஈ | எ - ஏ | ஒ - ஓ | |

மெய் எழுத்துக்கள் :

| | | |
|---|---|---|
| க் - ங் | ட் - ண் | ப் - ம் |
| ச் - ஞ் | த் - ந் | ற் - ன் |

குறிப்பு : இடையினமாகிய ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் ஓரினமாகும்.

# 5. கொலை மறுத்தல்



[புத்த பகவான் ஆட்டு மந்தையின் மத்தியில் இடர்ப்பட்டு நின்ற நொண்டி ஆட்டுக் குட்டியைத் தோளில் சுமந்துகொண்டு பிம்பிசார மன்னரின் யாக சாலையை அடைந்தார்; கடவுளுக்காகச் செய்யப்படும் யாகத்தில் ஜீவ வதை செய்வது தகுதியற்ற செயலென்றும், கடவுள் ஒரு போதும் ஜீவ வதையை விரும்பமாட்டார் என்றும் பற்பல நியாயங்களை எடுத்துக் கூறினர். கீழ்வரும் பாட்டுக்கள் புத்த பகவான் எடுத்துரைத்த நீதிகளுள் சிலவற்றைக் கூறுவனவாகும் :]

“வாழு முயிரினை வாங்கிவிடல் இந்த
மண்ணி லெவர்க்கும் எளிதாகும்;
வீழு முடலை எழுப்புதலோ ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா!

“யாரும் விரும்புவ தின்னுயிராம், அவர்
என்றுமே காப்பதும் அன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப் படும்
பாடு முழுதும் அறிந்திலிரோ?

“ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை
ஈட்டும் கருணை யிறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா!

"மைந்தருள் ஊமை மகனை ஒருமகள்
வாளா லரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண் டோ? இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!"

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி

புத்த பகவான் பிம்பிசாரனுக்குக் கூறிய பொன்மொழிகள் யாவை?

## 6. மணிமேகலை

[தமிழ் மொழியில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் மணிமேகலை என்பதும் ஒன்று. அதன் கதைச் சுருக்கமே இங்குத் தரப்பட்டுள்ளது:]

1. பூம்புகார் நகரில் தோன்றிய கோவலனுக்கும், நாடகக் கணிகையாம் மாதவி என்னும் நங்கைக்கும் பிறந்த மடக்கொடியே மணிமேகலை. தன் துணைவனை கோவலன் மதுரையம்பதியிற் பொற்கொல்லன் சூழ்ச்சியால் கொலையுண்டான் என்றறிந்த மாதவி தவக்கோலம் பூண்டு தன் மகள் மணிமேகலையுடன் புத்த மடமொன்றிற் புகுந்து வாழ்ந்து வந்தாள்.

2. ஒரு நாள் மணிமேகலை தன் தோழி சுதமதியுடன் பூக்கொய்து மாலை தொடுக்க நினைந்து மலர்வனம் சென்றாள். நெடுநாட்களாக அவள்பால் ஆசை கொண்டிருந்த உதயகுமரன் என்ற அந்நகரத்து அரசிளங்குமரன், அஃது அறிந்து மலர்வனமடைந்தான். அவனது நோக்கத்தையும், வருகையையும் அறிந்த சுதமதி, மணிமேகலையை ஆண்டிருந்த பளிக்கறையொன்றிற் செலுத்தித் தாழிட்டாள்.

3. சுதமதி தனக்கு இன்மொழிகள் பல கூறியும் கேளாத அம்மன்னனன் மகன், அங்கும் இங்கும் தேடி மணிமேகலை பளிக்கறையினுள் இருப்பதை அறிந்தான். ஆயினும், அதனுட்புக அவன் செய்த முயற்சி பயன் பெறுமற்போகவே, அவன் சினங்கொண்டு, மணிமேகலையைப் பலவாறு இழித்துக் கூறிவிட்டு, அவ்விடம் விட்டகன்றான். அவன் மறுபடியும் வருவானோ என்ற பயத்தாலும் அவன்

கூறிய இழிமொழிகளால் ஏற்பட்ட துன்பத்தாலும் மணிமேகலை சிந்தனையில் ஆழ்ந்து உறக்கத்தின் வயப்பட்டாள்.

4. அவள்பால் இரக்கங்கொண்ட மணிமேகலா தெய்வம் அவளை அன்றிரவே அவ்விடத்தினின்றும் அகற்றி, மணி பல்லவம் என்னும் தீவிற்கொண்டு விட்டது. மறுநாட் காலையில் துயில்நீத்துத் தன் தனிமையை உணர்ந்து, நாற்றிசைகளையும் நோக்கிய மணிமேகலை முன்னே புத்த பீடிகை ஒன்று தென்பட்டது. அதைக் கண்ட மணிமேகலை, பத்திமேலிட்டு, ஆனந்தக் கண்ணீர் சோர, அதை மும்முறை வலம் வந்து, மண்மிசை வீழ்ந்து வணங்கினாள்.

5. அப்போது விண்ணினின்றும் இழிந்த மணிமேகலா தெய்வம், அவளுடைய பழம்பிறப்பினை அவளுக்கு உணர்த்திற்று; பசிப்பிணியை அகற்றவும், ஆகாயத்திற் செல்லவும், வேண்டும்போது வேற்றுரு எடுக்கவும் கூடிய மந்திரங்களை அவளுக்கு உபதேசித்தருளியது; உதயகுமரனே மணிமேகலைக்கு முற்பிறப்பில் கணவனாய் இருந்தவன் என்பதையும் தெரிவித்து அவ்விடம் விட்டகன்றது.

6. பிறகு அங்கிருந்த தீவதிலகை என்னும் காவற் கன்னிகை மணிமேகலையை அத்தீவின் ஒருபால் இருந்த கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றாள். வைசாக பூரணமதி நிறைந்த அத்தினத்தில் அப்பொய்கையில் வழக்கம் போல அமுதசுரபி தோன்றி, மணிமேகலையின் திருக்கரங்களில் வந்திருந்தது. அப்போது அறச்சிந்தை உடையவர்க்கே கிட்டக்கூடிய அமுதசுரபி மணிமேகலைக்குக் கிடைத்தமை அவளுடைய பாக்கியமென்றும், அதைக் கொண்டு அவள் நல்லறம் புரியும் நற்றொழிலில் ஈடுபட வேண்டும் என்றும், தீவதிலகை கூறக்கேட்டு, மணிமேகலை புத்தர் பெருமானை வாழ்த்தி வணங்கித் தான் கற்ற மந்திர வலிமையால் தன் ஊர் திரும்பினாள். அங்கே அவள் கற்புக்கரசியாகிய ஆதிரையிடம் முதன் முதல் பிச்சை ஏற்றாள். அவ்வாதிரையின் கற்புத் திறத்தால் அவ்வமுதசுரபியில் உணவு குறைவுறாமல் எடுக்க எடுக்கப் பெருகுவதாயிற்று. பிறகு மணிமேகலை யானைத்தீ என்னும் பிணியால் பன்னிரண்டாண்டு பீடிக்கப்பட்டிருந்த காயசண்டிகையின்

பசிப் பிணியைப் போக்கியதன்றிக் குருடர், செவிடர், முடவர் முதலியவரை அழைத்து அவர்க்கும் உணவு நல்கி நல்லறம் புரிந்து வந்தாள்.

7. தவக்கோலம் பூண்ட மணிமேகலையைக் கண்ட உதயகுமரன் அவளை அணுகி, அக்கோலத்தின் காரணம் அறிய விழைந்தான். அதைக் குறிப்பாலுணர்ந்த அவள், அரிய மானிட யாக்கையைப் பெற்றது, அஞ்ஞானத்திற்கிடந்து உழல்வதற்கு அன்று என்றும், ஆருயிர் ஓம்பும் அறமேற் கொள்ளவேயாம் என்றும் கூறி, அதுவே தன் தவக்கோலத்திற்குக் காரணம் என்றும் வெளியிட்டாள்.

8. பின்னர் மணிமேகலை தன் மந்திர வன்மையால் காயசண்டிகை என்னும் வித்தியாதர மாதின் வடிவங்கொண்டு, அமுதசுரபியைக் கையிலேந்தி, எங்குஞ் சுற்றித்திரிந்து, வறியவர்க்கு அன்னம் வழங்கிக் காலம் கழிக்கலானாள். அக்காலை வித்தியாதரன் ஒருவனால் உதயகுமரன் கொலையுண்டான் எனக் கேட்டு, அதற்கு மணிமேகலையே காரணம் என்றெண்ணி, அவ்வூர் அரசன் அவளைச் சிறையிலிட்டான். அங்கு மணிமேகலைக்கு மன்னன் மனைவி இன்னல் பல புரிந்தும், அவற்றை ஒரு சிறிதும் அவள் பொருட்படுத்தாதிருந்தமையால், அரசி அச்சங்கொண்டு, அவளைச் சிறையினின்றும் விடுவித்துக் குறையிரந்தாள். மணிமேகலையும் அவளுக்கு அறிவுறை பல கூறி, அவ்விடம் விட்டு அகன்றாள்.

9. பிறகு மணிமேகலை வானூருக வஞ்சிமாநகர் அடைந்து, அங்குக் கோவில் கொண்டிலங்கிய கண்ணகி தேவியை வணங்கினாள்; ஆண்டிருந்து காஞ்சி மாநகர் அடைந்து, அங்குப் பசிப்பிணியால் வருந்திய அனைவர்க்கும் அன்னம் அளித்து ஆதரித்தாள். அன்றியும் அங்குத் தன் தாய் மாதவியையும், தோழி சுதமதியையும் காணும் பேறும் அவளுக்குக் கிட்டியது. அங்குத் தங்கி அறவண அடிகள் என்னும் புத்தமத முனிவரிடம் நல்லுபதேசம் பெற்றுத் தத்துவ ஞானமெய்தி, பிறவித் துன்பத்தைக் கடக்கும் தவ முயற்சியை மேற்கொண்டு வாழ்ந்து வந்தாள்.

# மணிமேகலை

## பயிற்சி

I. விடை கூறுக :—

1. மணிமேகலை என்பாள் யார்?
2. உதயகுமரன் என்பான் யார்? அவன் ஏன் மலர் வனம் சென்றான்?
3. மணிமேகலை மணிபல்லவத்தை எவ்வாறு அடைந்தாள்?
4. மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குக் கூறிய விஷயங்கள் யாவை?
5. 'அமுத சுரபி' என்பது யாது? அது மணிமேகலைக்கு எவ்வாறு கிடைத்தது?
6. மானிட யாக்கை பெற்றவர் அடையவேண்டுபவை யாவை?
7. மணிமேகலை தன் இறுதிக் காலத்தை எங்கே எவ்வாறு கழித்தாள்?

II. எதிர்ப்பதம் தருக :—

நெடுநாள், இன்மொழி, பயனற்றது, இருமொழி, விண், அறச்சிந்தை.

III. பொருள் தருக :—

மடக்கொடி, பளிக்கறை, ஆண்டிருந்த, சிந்தனை, துயில் நீத்து, விழைந்தான்.

IV. கீழ்வரும் சொற்களையும் தொடர்களையும் வாக்கியங்களில் அமைக்க :—

சூழ்ச்சி, கொய்ய, அரசிளங்குமரன், சினம்.

V. 7-ஆம் பத்தியிலுள்ள இரண்டாம் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக எழுதுக.

## இலக்கணம்

**குற்றியலுகரம் :** தனக்கு இயல்பாயுள்ள ஒரு மாத்திரை ஓசையிலும் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

ஒரு நெட்டெழுத்தும் ஒரு குற்றெழுத்தும் சேர்ந்துவரும் இரண்டெழுத்து மொழிகளின் ஈற்றிலும், இரண்டின் மிக்க எழுத்துக்களையுடைய சொற்களின் ஈற்றிலும் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்களுள் ஏதேனும் ஒன்றைக் கூடிவரும் உகரம் தன் இயல்பான ஓசையினின்று குறையும். அவ்வுகரமே குற்றியலுகரம் எனப்படும்.

**உதாரணம் :** கொக்கு, முரசு, காடு, அஃது, மாண்பு, மாற்று.

**குறிப்பு :** குற்றியலுகரம் தவிர மற்றைய உகரமெல்லாம் முற்றியலுகரம் எனப்படும்.

# 7. இராமகிருஷ்ணர்

[வித்துவான் அன்பு கணபதி அவர்கள்]

1. புதுமையை விரும்புவதிலும், வெளி மயக்கில் வீழ்ந்து விட்டிலைப்போல அழிவதிலும் இந்தியர்க்கு இணையாக உலகில் வேறு எவரையும் கூற முடியாது. ஒரு பொருளின் நன்மை தீமையை ஆழ்ந்து பாராது, புதுமை என்ற அளவில் அப்படியே அதனை எடுத்தாளுவது இந்தியரின் இயற்கைக் குணமாயிருக்கிறது. ஆங்கிலேயர் நம் நாட்டிற்கு வந்த பிறகு அவர்களிடம் கண்ட பழக்க வழக்கங்களையும், நடை உடை பாவனைகளையும் நம்மவர் மேற்கொள்ளத் தொடங்கினர். இந்தியர் தம்முடைய பழங்கலை, நாகரிகம் இவைகளைக் கைவிட்டனர். இந்நிலையில் இந்



தியரின் பண்டைப் பெருமைகளை உணர்த்தி அவர்களை நல்வழியில் திருப்ப இராமகிருஷ்ணர் தோன்றினர்.

2. வங்கத்தில் காமர்புகூர் என்னும் ஒரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் குதிராம் என்ற ஓர் அந்தணர் தம் இல்லக் கிழத்தியாராகிய சந்திரமணி என்பாருடன் வாழ்ந்து வந்தார். இவ்விருவருக்கும் திருமகனாராகி நம் இராம கிருஷ்ணர் 1836-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 17-ஆம் நாள் பிறந்தார். தக்க வயதில் அவர் தந்தையார் அவரைப் பள்ளிக்கு அனுப்பினர். நம் நாட்டு மக்கள் அனைவரும் மேல்நாட்டுக் கல்வியையே பெரிதும் விரும்பி வருகின்றனர். இக்கல்வியைக் கற்ற பலரும் நமது பண்டை நாகரிகத்தை வெறுத்து ஒதுக்குகின்றனர்; நமது பழைய நூல்களைக்

கண்டு எள்ளி நகையாடுகின்றனர்; நமது மதத்தையே பொய்யென மெய்கூசாது பேசுகின்றனர்.

3. இராமகிருஷ்ணர் இளமையில் பள்ளியில் கல்வி பயின்றாரேனும், அப்பள்ளிப் படிப்பில் அவர் உள்ளம் செல்லவில்லை. மெய்யறிவு அதாவது, ஞானம் பெற்று இறைவரை அறியவேண்டும் என்னும் பேரவா இவர் உள்ளத்திற் புகுந்தது. ஆதலின், இளமையிலிருந்தே இறைவருடையவும் அவர் அடியார்களுடையவுமான சரித்திரங்களைக் கேட்பதில் இராமகிருஷ்ணர் விருப்பம் கொண்டார். எனவே, இறைவரைப்பற்றிப் புகழ்ந்து பாடுவதிலும், ஆடுவதிலும், அவர் சரிதங்களைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதிலும் இராமகிருஷ்ணர் இன்பங்கொண்டார்; இதனையறிந்த பெற்றோர் இராமகிருஷ்ணரைப் பள்ளிக்கனுப்பாது நிறுத்திவிட்டனர்.

4. இராமகிருஷ்ணரின் பதினேழாம் வயதில் அவர் தந்தையாராகிய குதிராம் இறந்தார். பின்னர் இராமகிருஷ்ணர் தம் தமையனார் இருந்த கல்கத்தா நகருக்குச் சென்றார்; அங்கு அவர் கூறியதற்கிணங்கத் தக்கணேசுவரம் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு புதிய காளி கோவிலின் அருச்சகர் வேலையை ஏற்றுக்கொண்டு, சில காலம் அவண் வதிந்து வந்தார்; நாட்கள் பல செல்ல, அக்காளியின், பத்தியிலீடுபட்டு, அவளை நேரிற்காண விழைந்தார்; சில சமயம் காளிக்குப் பூசை செய்துகொண்டே மெய்ம்மறந்து நின்றுவிடுவார். இவ்வாறிருந்தும், காளியை நேரிற்காணும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. அக்காலத்தில் இராமகிருஷ்ணருக்கு மணம் ஆகியிருந்தது. அவர் மனைவியாரின் பெயர் சாரதாமணி என்பது. ஆயினும், அவர் தம் மனைவியாரைப் பராசத்தியாகக் கருதிவிட்டார். பின்னர் இராமகிருஷ்ணர் மூவாசைகளையும் துறந்து, ஒரு காட்டிற் சென்று, கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தார்.

5. அக்காலத்தில் ஒரு முனிவர் இராமகிருஷ்ணரிடம் வந்து, அவருக்கு மெய்யறிவு கொளுத்தி, யோக முறைகளையும் எடுத்துக் கூறிச் சென்றார். பின்னும் ஒரு துறவியால் வேதாந்தத்தின் உட்பொருளை இராமகிருஷ்ணர் அறிந்தார். இத்துடன் இராமகிருஷ்ணர் அமைந்தாரிலர்; இஸ்லாம்,

கிறிஸ்தவம் முதலிய பிற மதக் கொள்கைகளை இந்து மதக்-கொள்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தார்; இறுதியில் எல்லா மதங்களும் ஒரே கொள்கையைத்தான் உலகுக்கு வழங்கு-கின்றன என்பதைக் கண்டறிந்தார்.

6. இராமகிருஷ்ணர் உலக மக்களின் நன்மையைக் கருதித் தாம் கண்ட முடிவுகளை மக்கட்கு எடுத்தோதத் தொடங்கினார். நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று தாம் கண்ட முடிபுகளைச் சொற்பொழிவுகளின் மூலம் மக்களுக்குக் கூறலானார்; மிக உயர்ந்த கருத்துக்களையும் பாமரரும் உணரும் வண்ணம் எளிய நடையில் தெளிவாக எடுத்துக் கூறினார். உண்மையை உணர்ந்த மக்களுள் பலர் அவரைப் பின்பற்றலாயினர். நரேந்திரர் என்னும் பெயருடைய இளைஞர் ஒருவர் இராமகிருஷ்ணரிடம் அடிக்கடி வந்து, அவரது நல்லுபதேசங்களைக் கேட்டு வந்தார். நாளடைவில் நரேந்திரர் இராமகிருஷ்ணரின் மாணவராகிவிட்டார். இவரே இராமகிருஷ்ணருக்குப் பிறகு விவேகாநந்தர் என்னும் பெயருடன் இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் பரப்பி வந்தவர். இவ்விவேகானந்தராலேயே நமது பண்டைப் பெருமையை அமெரிக்கா முதலிய மேனாட்டிலுள்ள பெரு-மக்கள் உணர்ந்து, நம்மைப் போற்றத் தொடங்கினார்கள்.

7. "இறைவருக்கு எதிரில் உலக மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வு இல்லாதவர்கள். உலகில் பல மதங்கள் பல பெயருடன், பல கொள்கைகள் கொண்டனவாயிருப்பினும், அவைகளால் கூறப்படும் பொருள் ஒன்றே. மக்களுடைய மனம் ஒரே தன்மையானதன்று. சமூகம், சுற்றுச் சார்பு நிலை ஆகிய இவற்றால் அவை வேறுபடுகின்றன. இதனாலேயே நாட்டிற்கு நாடு பழக்க வழக்கங்களும் மதங்களும் வேறுபடு-கின்றன. ஆனாலும், நாம் கூறியவாறு எல்லாவற்றிற்கும் கருத்தில் ஒற்றுமை உண்டு. எனவே, பிற நாட்டாரையோ, மதத்தினரையோ தூற்றுவதோ, வெறுப்பதோ கூடாது. ஒவ்வொரு மனிதனும் கடவுளை அடையப் பாடுபட வேண்டும். நூல்களைக் கற்பதால் மட்டும் இது கிட்டாது. பரிபக்குவ நிலையை அவன் எய்த வேண்டும்," என்பனவே இராமகிருஷ்ணரின் முடிந்த கொள்கைகளாகும்.

8. இத்தகைய பெரியார் ஐம்பது ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்து, 1886-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ஆம் நாள் இவ்வுலகை நீத்தார். அவர் பெயரால் இன்று இந்திய நாட்டில் பல பள்ளிக்கூடங்களும், வைத்தியசாலைகளும் விளங்குகின்றன. பலர் அவருடைய கொள்கைகளை உலகில் பரப்பி வருகின்றனர்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. இராமகிருஷ்ணரின் தாய் தந்தையார் யவர்? இராமகிருஷ்ணரின் பிறப்பிடம் எது?
2. இராமகிருஷ்ணர் மெய்யறிவையும், யோகமுறைகளையும் எவ்வாறு அடைந்தார்? அவர் வேதாந்தத்தின் உட்பொருளை எங்ஙனம் உணர்ந்தார்?
3. மதங்களைப்பற்றி அவர் கொண்ட கருத்து யாது?
4. இராமகிருஷ்ணரின் நல்லுபதேசங்கள் யாவை?

II. வாக்கியங்களில் அமைக்க :—

எள்ளி நகையாடு, மெய்கூசாது, பேரவா, அவண், வதிந்தார், மெய்யறிவு கொளுத்த.

III. 5-ஆம் பத்தியிலுள்ள முதல் வாக்கியத்தைச் சிறுசிறு வாக்கியங்களாக அமைத்து எழுதுக.

## இலக்கணம்

### சொல்

சொற்கள் பகாப்பதம், பகுபதம் என இரு வகையாம்.


**பகாப்பதம் :** பகாப்பதமாவது, பகுத்தால் பகுதி, விகுதி முதலிய பயனில்லாமல் ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லாம்.

பெயர்ப் பகாப்பதம், வினைப் பகாபதம், இடைப் பகாப்பதம், உரிப் பகாப்பதம் எனப் பகாப்பதம் நான்கு வகைப்படும்.

**உதாரணம் :** மண், மரம்—பெயர்ப் பகாப்பதம்
இரு, செல்—வினைப் பகாப்பதம்
இனி, மற்று—இடைப் பகாப்பதம்
சால, நனி—உரிப் பகாப்பதம்

**குறிப்பு :** பகாப்பதம் - பிரிக்க இயலாத சொல்.

# 8. செஞ்சிக்கோட்டை



1. தமிழ் நாட்டை வளப்படுத்தும் ஆறுகளுள் தென் பெண்ணையும் ஒன்று. அதன் இரு கரைகளிலும் உள்ள நிலப்பகுதி முற்காலத்தில் அருவா நாடு என்று வழங்கப்பட்டு வந்தது. அஃது இக்காலத்தில் தென்னார்க்காடு ஜில்லா என்று வழங்கப்பட்டு வருகிறது.

2. இந்த ஜில்லாவில் உள்ள திண்டிவனம் தாலுக்காவின் வடமேற்குக் கோடியில் தோன்றிக் கிழக்கே ஓடி, வங்காளக் குடாக்கடலில் கலக்கும் ஒரு சிற்றாறு இருக்கின்றது. இதற்கு வராகநதி, செஞ்சியாறு, அரியாங்குப்பத்துயாறு என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இந்த யாற்றின் தென்பக்கத்தில் செஞ்சி என்னும் ஊரும், அதையடுத்து உன்னதமான ஒரு கோட்டையும் இருக்கின்றன. இக்கோட்டைக்குச் செஞ்சிக்கோட்டை என்பது பெயர்.

3. செஞ்சிக்கோட்டையின் அமைப்பு மிகவும் வியக்கத்தக்கது. மூன்று சிறு குன்றுகளை அகன்றவையும், உயர்ந்தவையும், வன்மை மிக்கவையுமான கருங்கற்சுவர்களால் இணைத்து இக்கோட்டை கட்டப்பட்டுள்ளது. இச் சுவர்களைச் சூழ்ந்து, ஆழ்ந்து அகன்ற அகழிகள் உள்ளன.

இம்மூன்று குன்றுகட்கும் இடைப்பட்ட முக்கோண வடிவமான நிலப்பரப்பு, மூன்று மைல் சுற்றளவுள்ளது. இக்கோட்டையைப் பொதுவாகக் கீழ்க்கோட்டை என்று கூறுவார்கள்.

4. இக்கோட்டைக்கு இரண்டு வாயில்கள் உண்டு. அவற்றுள் ஒன்று வடக்கிலும், மற்றொன்று கிழக்கிலும் உள்ளன. வட வாயிலுக்கு 'ஆர்க்காட்டு வாயில்' அல்லது 'வேலூர் வாயில்' என்னும் பெயர்களும், தென் வாயிலுக்குப் 'புதுச்சேரி வாயில்' என்னும் பெயரும் வழங்கி வருகின்றன.

5. கீழ்க்கோட்டைக்குள் இருக்கும் குன்றுகளுள் ஒன்று வடக்கிலும், மற்றொன்று தெற்கிலும், வேறொன்று மேற்கிலுமாய் அமைந்துள்ளன. வடபால் உள்ளது கிருஷ்ணகிரி எனவும், தென்பால் உள்ளது சந்திராயன் துர்க்கம் எனவும், மேற்பால் உள்ளது ராஜகிரி எனவும் பெயர் பெறும். ராஜகிரிக்குத் தெற்கில் ஒரு சிறிய குன்றுண்டு. அதற்குச் சங்கிலி துர்க்கம் என்பது பெயர். இவற்றுள் மிகவும் உயரமானதும் முக்கியமானதும் ராஜகிரியேயாம்.

6. ராஜகிரி கடல் மட்டத்துக்கு 970 அடி உயரமும், அதைச் சூழ்ந்துள்ள சமவெளிக்கு 800 அடி உயரமும் உள்ளது. இக்குன்றின் வடபாகம் செங்குத்தாய் அமைந்திருக்கிறது. கீழ்க்கோட்டையில் இக்குன்று அமைந்துள்ள பகுதியைச் சுற்றி உயர்ந்த சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஆகவே, கீழ்க்கோட்டையினுள் அமைந்துள்ள இக்கோட்டையை உட்கோட்டை எனலாம். ராஜகிரியின் உச்சியை அடைவதற்கு ஏற்பட்டுள்ள ஒரே பாதை இந்த உட்கோட்டையின் மூலமாகத்தான் அமைக்கப்பட்டுள்ளது.

7. ராஜகிரியின் வடபாகம் செங்குத்தாய் அமைந்துள்ளதெனக் கூறினோம். கிழக்குப் பகுதியும், தெற்குப் பகுதியுங்கூட உச்சியிலிருந்து 400 அடி உயரம் கீழ்நோக்கிச் செங்குத்தாயும், அதற்கு அப்பால் சமநிலம் போலச் சுமார் 100 அல்லது 150 அடி அகலம் பிதுக்கமுற்றும், அங்கிருந்து தரைவரையில் சரிவுற்றும் அமைந்துள்ளது. பிதுக்கமுற்று விளங்கும் சமநிலத்தை இம்மலையின் பீடபூமிப்

பாகமாகக் கொள்ளலாம். இப்பீடபூமியின் வரம்பில் உயர்ந்த கருங்கற் சுவர்கள் எழுப்பப் பெற்றுள்ளன. உட்கோட்டையிலிருந்து இப்பீடபூமிப் பாகம் வரையில் எளிதாக ஏறுவதற்குப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிகள் செல்லும் மார்க்கத்தில் இடையிடையே பத்துச் சிறு மண்டபங்கள் அமைந்துள்ளன.

8. படிகளின் மீது ஏறிப் புளியமரங்கள் நிறைந்த பீடபூமிப் பாகத்தை அடைந்த உடனே, அதன் கீழ்க்கோடியில் அழகிய ஒரு சிறு கோவில் இருக்கிறது. அஃது அரங்கநாதர் ஆலயம் எனப்படுகிறது. ஆனால், அதில் விக்கிரகம் இல்லை. அக்கோவிலுக்கு மேற்கே சென்றால், துர்க்கைக்குரிய சிறிய கோவில் ஒன்றைக் காணலாம். அதற்குக் கமலக்கன்னி கோவில் என்னும் பெயர் வழங்குகிறது. கமலக் கன்னி ஆலயத்தைக் கடந்து மேலும் மேற்கே சென்றால், இரண்டு பெரிய பாறைகளின் கீழ் ஒரு சுனை இருக்கிறது. அச்சுனை நீர் மிகவும் உருசியாயும், குளிர்ச்சியாயும் இருக்கிறது. அச்சுனைக்குத் தென் பாரிசத்திலும் சில மண்டபங்கள் பாழடைந்த நிலையில் உள்ளன.

9. சுனையைக் கடந்து மேலும் மேற்கே சென்றால் பீடபூமிப் பகுதி அகலம் குறைந்து, ராஜகிரியின் செங்குத்தான பாகத்தை அடைகிறது. அப்பாகம் சிறிது அகன்று சமநிலம் போலமைந்துள்ளது. அங்கும் ஓர் அழகிய ஆலயம் இருக்கிறது. அதிலும் விக்கிரகம் இல்லை. அதற்கு மேற்கே உயர்ந்த நீளமான மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அது கொலு மண்டபம் என்றும், சங்கீத மண்டபம் என்றும் கூறப்படுகிறது. அதனுட் சென்று பேசினாலும் பாடினாலும் உண்டாகும் எதிரொலி மிகவும் வியக்கத்தக்கது. அவற்றின் வடபாரிசத்தில் கொடி மரம் நிற்கும் கட்டடமும், தெற்கில் மணிக்கூண்டும் காணப்படுகின்றன. மணிக்கூண்டின் தென் பாரிசத்தில், சிறிது தாழ்ந்த இடத்தில், சிறு மண்டபம் ஒன்றில் 11 அடி நீளமும் 7 அடிச் சுற்றளவும் உள்ள ஒரு பெரிய பீரங்கி காணப்படுகிறது; இதைத் தவிர, அச்சிகரத்தின் மேற்குப் பகுதியில் ஆழ்ந்த நிலவறையுள்ள ஒரு பெரிய கட்டடம் உண்டு. அது பொக்கிஷசாலை

என்று கூறப்படுகின்றது. பாறைகளின் கீழ் நீர் நிறைந்த இரண்டு சுனைகள் உள்ளன. அங்குள்ள கட்டடங்கள் எல்லாம் மிகவும் வலிமை பொருந்தியவையாய் அவற்றின் பழமையை உணர்த்துகின்றன.

10. இவ்வரிய காட்சிகளைக் கண்ணுற்றுக் கீழே இறங்கினால், முற்கூறிய உட்கோட்டையை அடைவோம். அங்கு அழிந்தவை போக எஞ்சி உள்ள பல சின்னங்கள் காணப்படுகின்றன. யானை குதிரைகள் கட்டும் இடங்கள், போர் வீரர்களின் உறைவிடங்கள், மிகப்பெரிய தானியக் களஞ்சியங்கள், உடற்பயிற்சி மண்டபம் முதலிய பல கட்டடங்கள் காட்சியளிக்கின்றன. இவையன்றி, ஏழடுக்கு உப்பரிகையும் ஒன்று அங்குண்டு. அது நாலாப் பக்கங்களிலும் திறப்பிடங்களைப்பெற்று, மிகவும் விநோதமாகவும், அழகாகவும் விளங்குகிறது. இவற்றைப் பார்த்துக்கொண்டு கிழக்கில் உள்ள உட்கோட்டையின் வாயிலைக் கடந்து வெளி வருவோமாயின், அதற்கு நேர் கிழக்கில் சாதத்துல்லா கான் மசூதியும், அதன் தென் பாரிசத்தில் சிதைவுற்று விளங்கும் மிகப் பெரிய வேங்கடரமண சுவாமியின் ஆலயமும் இருக்கின்றன. இவை கீழ்க்கோட்டையினுள் அடங்கியவையாம்.

11. கிருஷ்ணகிரி என்பது ராஜகிரியைப்போலப் பெரியதும் அன்று; உயர்ந்ததும் அன்று; வன்மை மிக்கதும் அன்று. ஆயினும் அதன் உச்சியிலும் பண்டைச்சின்னங்கள் பல காட்சி அளிக்கின்றன. அதன் உச்சியில் இரண்டு பெரிய களஞ்சியங்கள் உள. பாழடைந்த ஒரு மண்டபமும், விக்கிரகமில்லாத அரங்கநாதர் ஆலயம் ஒன்றும் அங்குள்ளன. செங்கல்லாற் கட்டப்பட்ட அழகிய கொலு மண்டபம் ஒன்று அங்கே காணப்படுகிறது. அம்மண்டபம் இரண்டு அடுக்குகளை உடையது. அதன் மேல் அடுக்கிலே தான் அரசர் அமர்ந்து குடிகளுக்குத் தரிசனம் அளிப்பாராம். கீழ் அடுக்கில் அவர் பொழுது போக்குவாராம். அங்குக் கருங்கல்லினற் செய்யப்பட்ட சங்கிலிகள் பூட்டிய ஓர் ஊஞ்சல் உண்டு. அஃது இந்தியச் சிற்பிகளின் திறமையை வெளிப்படுத்துகின்றது. கிருஷ்ணகிரியின்மீதும் நீர்ச்சுனை ஒன்று உண்டு.

12. ராஜகிரி, கிருஷ்ணகிரிகளைத் தவிரச் சந்திராயன் துர்க்கமும், சங்கிலி துர்க்கமும் கீழ்க்கோட்டையைச் சேர்ந்தவை என்பது கூறப்பட்டது. அவை சிறு குன்றுகள். அவற்றின்மீது சில சிறு மண்டபங்கள் தவிர வேறொன்றும் இல்லை. அம்மண்டபங்களை நாம் கீழிருந்தே காண முடியும்.

13. இவை தவிரக் கிருஷ்ணகிரிக்கு வடக்கே அரங்க-நாதர் மலையென்னும் ஒரு சிறு குன்றும் உண்டு. அதன் மீதுள்ள ஆலயத்தில் சயனத் திருக்கோலமாயுள்ள அரங்க நாதர், கோபுரவாயிலுக்கு முதுகு காட்டிய வண்ணம் காட்சி அளிக்கிறார். இதைப்பற்றி வழங்கும் கதை யாவரும் அறிந்ததே.

14. செஞ்சிக் கோட்டையின் சிறப்பையும், அதன் அமைப்பையும் சொற்களால் வருணித்தல் முடியாத காரியம். அதை நேரிற்காண்பவர் பண்டைத் தமிழரின் அறிவையும், ஆற்றலையும், சிற்ப நுட்பங்களையும் வியந்து போற்றுதிரார்.

### பயிற்சி

I. விடை தருக :—

1. தமிழ்நாட்டின் எப்பகுதிக்கு முற்காலத்தில் 'அருவாநாடு' என்னும் பெயர் வழங்கி வந்தது ?
2. வராக நதிக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
3. செஞ்சிக் கோட்டை எங்கே அமைக்கப் பெற்றுள்ளது ?
4. கீழ்க்கோட்டையின் அமைப்பை விவரிக்க.
5. 'உட்கோட்டை' என்பது எது ?
6. ராஜகிரியின்மீது காணப்படும் சின்னங்கள் எவை ?
7. கிருஷ்ணகிரியின்மீதுள்ள சின்னங்களுள் இந்தியச் சிற்பிகளின் ஆற்றலை விளக்கி நிற்பது எது ?
8. அரங்கநாதர் மலையின்மீதுள்ள அரங்கநாதர் விக்கிரகத்தைப் பற்றிய புதுமை யாது ?

II. பொருள் தருக.

உன்னதமான, இணைத்து, விக்கிரகம், எதிரொலி, பாரிசம், வியக்கத் தக்கது, கண்ணுற்று, எஞ்சிய, உறைவிடம், களஞ்சியம், உப்பரிகை, சிதைவுற்றது.

III. எதிர்ப்பதம் எழுதுக :—

இணைத்து, செங்குத்து, எளிது.

IV. வாக்கியங்களில் அமைக்க :—

எளிது, காட்சி, சின்னங்கள், இலது, உன்னதமான, எதிரொலி.

**V. 5-ஆம் பத்தியில் உள்ள இரண்டாம் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக்குக.**

## இலக்கணம்

**பகுபதம்:** பகுதி விகுதி முதலியனவாகப் பகுத்தால், பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருள் தோன்ற நின்று, ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லே பகுபதமாகும். அது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இருவகைப்படும்.

**உதாரணம்:** பொன்னன் - பெயர்ப் பகுபதம்
செய்தான் - வினைப் பகுபதம்

**குறிப்பு:** இடைச் சொல்லிலும், உரிச் சொல்லிலும் பகாப்பதம் மாத்திரமே உண்டு; பகுபதம் இல்லை.

**பகுதி:** பகுபதத்தைப் பிரித்தால், முதலில் நிற்கும் உறுப்பே பகுதியாம். முதல் நிலை என்பது இதன் வேறு பெயர்.

**உதாரணம்:** பொன்னன் - பொன் (பகுதி)
செய்தான் - செய் (பகுதி)

**விகுதி:** பகுபதத்தைப் பிரித்தால் ஈற்றில் நிற்கும் உறுப்பே விகுதியாம். இறுதி நிலை என்பது இதன் வேறு பெயர்.

**உதாரணம்:** பொன்னன் - அன் (விகுதி)
செய்தான் - ஆன் (விகுதி)

**இடை நிலை:** பகுபதத்தில் பகுதிக்கும், விகுதிக்கும் இடையே நிற்கும் உறுப்பே இடை நிலையாம்.

**உதாரணம்:** கலைஞன் (கலை + ஞ் + அன்) ஞ்-இடைநிலை.
செய்தான் (செய் + த் + ஆன்) த்-இடைநிலை.

# 9. கவிச் சித்திரம்



[பெரும் புலவர்கள் இயற்றும் கவிகளைப் படிக்கும்போது அக்கவிகளில் அடங்கியுள்ள விஷயங்களை நமது மனக்கண்ணால் காண முடியும். அத்தகைய கவிகளே கவிச் சித்திரங்கள் எனப்படும். பின் தரப்பட்டுள்ள கவி அத்தகையதே. இராமபிரானுக்கு மகுடாபிஷேகம் செய்ய நிச்சயிக்கப் பட்டுள்ளது. அச்செய்தி கேட்ட அயோத்தி நகர மக்கள் அனைவரும் ஆனந்த மேலீட்டால் விழாக் கொண்டாடுகிறார்கள். இராமரின் சிற்றன்னையாகிய கைகேயியும் உவகையுறுகின்றாள். ஆனால், அவ்வம்மையின் தோழியான மந்தரை மட்டும் இராமபிரானிடம் அழுக்காறுற்றுக் கைகேயியின் மனத்தைப் பற்பல காரணங்கள் கூறி மாற்றுகிறாள்; தசரதர் கைகேயி வேண்டும்போது தருவதாக வாக்களித்திருந்த இரண்டு வரங்களையும் பெறுமாறு தூண்டுகிறாள். ஒரு வரத்தினால் பரதனுக்கு அரசு பெறவேண்டுமென்றும், மற்றொரு வரத்தினால் இராமபிரானைக் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும் யோசனை கூறுகிறாள் மந்தரை. அதற்கிசைந்த கைகேயி, தசரதர் தன்னை நாடி வருவதற்குள் அவரிடம் தான் விரும்பிய வரங்களைப் பெறுவதற்கேற்பத் தன்னைச் சித்தப்படுத்திக் கொள்கிறாள்; தான் அணிந்திருந்த அணிகளைக் கழற்றி அறையிற் பல இடங்களிலும் சிதறுகிறாள்; மணம் வீசும் கூந்தல் பூமியில் விழுந்து புரளும்படி, கண்களினின்றும் நீர் வடிய, மலர்கள் உதிரப்பெற்ற ஒரு பூங்கொம்பு கீழே விழுந்து கிடந்தாற் போலத் தரையில் விழுந்து கிடக்கிறாள் என்று கூறுகிறார் கம்பர். இவ்விஷயங்கள் அடங்கியுள்ள பாட்டைப் படிக்கும்போது நம் மனத்தின் முன்

தோன்றும் சித்திரத்தை மேலே தரப்பட்டுள்ள சித்திரத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.]

தாவில் மாமணிக் கலன்மற்றுந் தனித்தனிச் சிதறி
நாவி மென்முழல் நானிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்ட கண் அஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவு திர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள்.

கம்பராமாயணம்] [மந்தரை சூழ்ச்சிப் படலம்

## 10. மீரா பாய்

1. இந்துக்களின் பெருமைக்குக் காரணமாயிருந்ததும், இருப்பதும் அவர்களது தெய்வ பக்தியேயாம். பண்டைக் காலத்தில் ஆடவர்களேயன்றிப் பெண்டிரும் தெய்வ பத்தியிற் சிறந்து விளங்கினர். மீரா பாய் என்னும் அம்மையார் அவர்களுள் ஒருவர்.

2. மீரா பாய் என்பவர் ஜோதிபுரத்தை ஆட்சி புரிந்து வந்த ஓர் அரசரின் அருமைப் புதல்வியார். அவருடைய இளமையிலேயே தாய் தந்தையர் இறந்தனர். ஆதலின் மீரா பாய் அவருடைய பாட்டனார் வீட்டில் வளர்ந்து வந்தார். மீரா பாய் அறிவில் சிறந்தவர்; அழகில் நிகரற்றவர்; அவரிடம் அவருடைய பாட்டனார் அளவற்ற அன்புகொண்டிருந்தார். தாம் வெளியிற் செல்லும்போதெல்லாம் மீரா பாயையும் அவர் உடனழைத்துச் செல்வது வழக்கம். அக்காலங்களில் மீராபாய் கேட்கும் கேள்விகளுக்கு அவர் மிகவும் அமைதியுடன் விடை கூறி, அவ்வம்மையாரை அகம் மகிழச் செய்வார்.

3. ஒருநாள் ஒரு திருமண ஊர்வலத்தைக் கண்ட மீரா பாய், தம் பாட்டனாரை நோக்கி, "கலியாணம் என்பது என்ன? எனக்கு எப்போது திருமணம் நடக்கும்? என்னை யார் மணப்பார்?" என்னும் வினாக்கள் பலவற்றைக் கேட்டார். அவற்றிற்குத் தக்க விடைகளை அளிக்க முடியாத பாட்டனார், "குழந்தாய், உனக்கும் விரைவில் கலியாணம் நடக்கும். உன்னைத் திருக்கண்ணபிரானாரே மணந்து கொள்வார்," என்று விடை கூறினார். அதுகேட்ட மீரா பாய், அதை உண்மையாகக் கொண்டு, அன்று முதல் கிருஷ்ண-

பகவானையே தமக்குரிய மணாளராக எண்ணினர். அவருடைய உருவச் சிலை யொன்றைச் செய்வித்து அதற்குப் பூசை புரிவதிலேயே தம் காலத்தைக் கழித்து வரலானார்.

4. மீரா பாய் மணப்பவரும் எய்திய உடனே அவருடைய பாட்டனார் அவரை உதயபுரத்து மன்னருக்கு மணம் செய்து வைத்தார். அப்போது அம்மன்னர் மீராபாயின் பத்திக்கும் பஜனைக்கும் எவ்வித இடையூறும் செய்யாமல் இருப்பதாக வாக்களித்தார்; அவ்வாறே தம் அரண்மனையின் அந்தப்புரத்தில் ஒரு சிறிய கோவிலை அமைத்து அதில் கிருஷ்ண விக்கிரகமொன்றை எழுந்தருளச் செய்தார். மீரா பாய் அங்கு இருந்துகொண்டு தம் விருப்பப்படி பூசை புரிய அனுமதிக்கப்பட்டார்.

5. ஆனால், நாளடைவில் துரதிர்ஷ்டவசமாக மீராபாயின் கணவனார் அவ்வம்மையார் தம்மை அசட்டை செய்வதாக எண்ண ஆரம்பித்தார். அதற்குக் காரணம் அவருடைய கிருஷ்ண பூசையே என்றும் எண்ணினர். ஆதலால், அவ்வறிவிலார், அக்கோவிலைப் பூட்டிவிட்டு, அவ்வம்மையாரையும் சிறையிலிட்டார். அதோடு அமையாமல் அவ்வம்மையாரைக் கொல்லவும் முயன்றார். ஆனால் இறைவன் இன்னருளால் மீராபாய் உயிர் தப்பினர். ஆயினும் அவர் நாடு கடத்தப்பட்டார்.

6. இத்தனை கொடுமைகளையும் இழைத்த தம் கணவரிடம் சிறிதும் கோபம் கொள்ளாமல் மீராபாய் நாட்டை விட்டு வெளியேறிப் பல திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு துவாரகையை அடைந்து, அங்குத் தங்கியிருந்தார். அப்போது உதயபுரத்துக் குடி மக்கள் பரமபத்தையான தங்கள் அரசியாரை நாடுகடத்தியதற்காகத் தங்கள் அரசரை எதிர்த்துப் போர்புரியத் துணிந்தார்கள். அன்றியும், உதயபுரமும், அதிர்ஷ்ட தேவதை அதை விட்டு அகன்று விட்டதால், வளங்கள் குன்றிப் பாழ் நகரம் போல ஆயிற்று.

7. அப்போது அறிவிற் சிறந்த மந்திரியார் ஒருவர் அரசரிடம் சென்று, அவர் மீரா பாய்க்கு விளைத்த தீங்கே நாடு சீரழிந்து போகக் காரணமாயிற்று என்பதை விளக்கமாகக் கூறினர். அரசரும் தம் அறியாமை நீங்கப்பெற்றுத்

தம் தவற்றை உணர்ந்து, உடனே புறப்பட்டுத் துவாரகையை அடைந்தார்; அங்குப் பத்தி உருவமாய் விளங்கிக்கொண்டிருந்த மீராபாயிடம் தம் குற்றங்களைப் பொறுத்துத் தம்மை மன்னிக்குமாறு வேண்டினர்; தம்மோடு வந்து, தம் இராச்சியம் முன்போலச் செழிப்புற்றோங்கக் கிருபை செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தார். அவருடன் சென்றிருந்த குடிமக்களும் தங்கள் அரசியார் மீண்டும் உதயபுரம் வர வேண்டுமெனக் கூறி வணங்கினர்கள். ஆதலின், மீராபாய் அவர்களின் வேண்டுகோளுக்கிணைந்து, நாட்டுக்கு வந்து சில ஆண்டுகள் தங்கியிருந்தார். நாடு மீண்டும் நலனுற்று விளங்கியது.

8. மீராபாய் மறுபடியும் துவாரகையை அடைந்து, அங்குத் தாம் பூசித்து வந்த கிருஷ்ண விக்ரகத்தில் எல்லாரும் காணச் சோதி வடிவாய் ஐக்கியமானர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்மணிகளே இந்தியாவின் பண்டைப் பெருமைக்குக் காரணமானவர்கள். இக்காலத்தும் நம் நாட்டுப் பெண்மணிகளின் கடவுள் பத்தியே நமது நாட்டுக்குப் பெருமையளித்து வருகிறது என்று தயங்காமற் கூறலாம்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. இந்துக்களின் பெருமைக்குக் காரணமாயிருந்ததும், இருப்பதும் யாது?
2. மீராபாய் யார்? அவர் இளமைப் பருவத்தில் யாரிடம் வளர்ந்தார்?
3. மீராபாய் தம் இளமையிலேயே கண்ணபிரானின் சிலையைப் பூசித்து வந்ததற்குக் காரணம் என்ன?
4. மீராபாயை மணந்துகொண்டவர் யார்? அவர் அவ்வம்மையாரை ஏன் சிறையிலிட்டார்?
5. மீராபாயின் கணவர் தம் தவற்றை எவ்வாறு உணர்ந்தார்?

II. பொருள் தருக :—

புதல்வி, நிகரற்றவர், மணாளர், பஜனை, இடையூறு, அனுமதி, அசட்டை, பத்தை, ஐக்கியம்.

III. வாக்கியங்களில் அமைக்க :—

அசட்டை, கொடுமை, நாடு கடத்து, சீரழிவு, நலமுற்றது.

## இலக்கணம்

### பெயர்ச்சொல்

பொதுப் பெயர், சிறப்புப் பெயர் எனப் பெயர்ச்சொற்கள் இரண்டு வகையாம்.

1. பொதுப்பெயர் : பல பொருள்களுக்கும் பொதுவாய் வழங்கும் பெயர் பொதுப்பெயர் எனப்படும்.

உதாரணம் : மரம்-இஃது எல்லா மரங்களுக்கும் வழங்கும் பெயர் ஆதலால், பொதுப்பெயர்.

மக்கள்-இஃது எல்லா மனிதருக்கும் வழங்கும் பெயர் ஆதலால் பொதுப்பெயர்.

2. சிறப்புப்பெயர் : ஒருவகைப் பொருளுக்கே அல்லது ஒரு சாதிப் பொருளுக்கே வழங்கும் பெயர் சிறப்புப் பெயர் எனப்படும்.

உதாரணம் : பலா-இஃது ஒரு சாதி மரங்களுக்கு மட்டும் பெயர். ஆதலால், சிறப்புப் பெயராம்.

இராமன்-இது பல மனிதருள் ஒரு மனிதனைக் குறிக்கும் பெயர். ஆதலால், சிறப்புப் பெயராம்.

சுட்டுப்பெயர் : சுட்டு இடைச்சொற்களைப் பகுதியாகப் பெற்று வரும் பெயர் சுட்டுப்பெயர் எனப்படும்.

உதாரணம் : அவன், இவன், உவன் — இவற்றுள் அ, இ, உ என்னும் சுட்டிடைச் சொற்கள் பகுதியாக வந்தமை காண்க.

குறிப்பு : அ, இ, உ என்னும் இம்மூன்றும் எழுத்து வகையால் சுட்டெழுத்தாம். சொல் வகையால் சுட்டிடைச் சொல்லாம்.

வினாப்பெயர் : இது வினா இடைச்சொற்கள் ஐந்தனுள் எ, யா என்னும் இவ்விரண்டையும் பகுதியாகப், பெற்றுவரும் பெயராம்.

உதாரணம் : எவன்? யாவன்? — இவற்றில் எ, யா என்னும் வினா இடைச் சொற்கள் பகுதிகளாம்.

குறிப்பு : மேலே சுட்டுப் பெயரின்கீழ்க் கொடுக்கப்பட்ட குறிப்பை இதற்கும் கொள்க.

# 11. கயிலாயகிரி யாத்திரை

[ஸ்ரீமத். சித்பவானந்த சுவாமிகள்]



தக்களக்கோட்டை

[திருக்கயிலாயகிரி யாத்திரை செய்பவர் தங்கிச் செல்லும் இடங்கள் பல. அவற்றுள் கர்பியாங்கு என்பது ஒன்று. அவ்விடத்திலிருந்து அடுத்த இடமாகிய தக்களக்கோட்டை செல்லும் மார்க்கத்தில் லிப்புத் தடாகக் கணவாய் இருக்கிறது. அது கடல் மட்டத்துக்குமேல் 16,800 அடி உயரத்தில் உள்ளது.]

1. லிப்புத் தடாகக் கணவாயினின்று 12 மைல் நடந்த பின் தக்களக் கோட்டை என்னும் ஊர் வந்து சேருகிறோம். திபெத்தில் நாங்கள் பார்த்த ஊர்களில் பெரியது இஃது ஒன்றுதான். இங்கு ஜம்பன் எனும் அரசியல் அதிகாரி இருக்கிறான். அவன் நம் நாட்டில் உள்ள கலெக்டருக்கு ஒப்பவன். திபெத்தில் அதிகாரமுழுவதும் பௌத்த சன்னியாசிகளிடம் இருக்கிறது. அரசனுக்குப் பதிலாக ஒரு பௌத்த சன்னியாசியே அந்நாட்டை ஆண்டு வருகிறார். தக்களக் கோட்டையானது கர்னலி எனும் நதிக்கரையோரம் இருக்கிறது. இது பிரமபுத்திரா நதிக்கு உபநதியாகும். பார்ப்-

பதற்கு இது மிக அழகாயிருக்கிறது. ஆங்காங்கு மலையின் மீது உறைபனியும் தென்படுகிறது. திபெத்தில் மழை பெய்வது இல்லை. அது சுமார் 14,000 அடி உயரத்தில் இருக்கும் பீட பூமியாதலால், பனிக்கட்டியே மழைக்குப் பதிலாகப் பெய்கின்றது. நதியினின்று கால்வாயின் வாயிலாகத் தண்ணீர் பாய்ச்சித் தக்களக்கோட்டையில் கொஞ்சம் கோதுமை, பட்டாணி முதலியவைகளை வேனிற் காலத்தில் சாகுபடி செய்கின்றனர். திபெத்தில் வேறு எவ்விடத்திலும் கிருஷித் தொழிலை நாங்கள் பார்க்கவில்லை.

2. வீடுகள் கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டிருக்கின்றன. கூரைக்கு மரம், குச்சி முதலியவைகளைப் போட்டுக் களிமண்ணால் மூடியிருக்கின்றனர். இன்னும் சிலர் மலைச் சாரலில் குகைபோன்று குழிவெட்டி, அதனுள் வாசம் செய்கின்றனர். அவ்வீடுகள் அழுக்குக்கும், அசுசிக்கும் பேர் பெற்றவைகள். வீட்டின் அருகில் செல்லுவது நம் போன்றவர்களுக்கு இயலாது. மக்களிடத்தும் ஒருவித வாடை வீசிக் கொண்டிருக்கிறது. நீராடுவதும், பல் துலக்குவதும் துணி கசக்குவதும் அந்நாட்டில் செயற்கரிய செய்கைகளாம். திபெத்தியர் பலசாலிகள்; ஆனால், அழகுடையவர் அல்லர். குளிர்காற்றுப் படுவதால் அவர்களுடைய முகமும் கையும் கறுப்பாயிருக்கும். ஆண் மக்கள் முகத்தில் உரோமம் வளர்வதில்லை. உடையிலும் அதிக வித்தியாசம் இல்லை. ஆதலால், அவர்களுள் ஆண்கள் யார், பெண்கள் யார் என்று தெரிந்து கொள்வது கொஞ்சம் கடினம். முகத்தோற்றத்தில் அவர்கள் பெரிதும் முரடர்களாகவே யிருப்பார்கள். கற்றவர்களைக் காண்பது அரிது. தேநீர், பச்சை இறைச்சி, வறுத்த கோதுமை மாவு ஆகியவைகளே அவர்களின் முக்கிய உணவு. அவர்கள் வீட்டைச் சுற்றிலும் ஆட்டுக் கொம்புகளும், எலும்புகளும் சிதறுண்டு கிடப்பதைக் காணலாம்.

3. கவரி என்று வழங்கப்படும் சடை மாடுகள் தக்களக் கோட்டையில் உண்டு. அவைகளின் மீது சவாரி செய்வதும் சாமான்களை ஏற்றிச் செல்லுவதும் அத்தேசத்து வழக்கம். அம்மாடுகளின் வால் நுனியில் உள்ள பெரிய குஞ்சங்களே சாமரமாக உபயோகப்படுகின்றன. கவரியின்

பாலைத் திபெத்தியர் அருந்துகின்றனர். தடித்துள்ள அப்பாலின் மணமும் சுவையும் நம்மவர்க்குப் பிடியா. உடலுக்கும் அஃது ஒத்துக்கொள்வதில்லை. இதன் வெண்ணெயைத் தோற்பாண்டத்தில் போட்டு விற்கின்றனர். அதன் நாற்றமோ, சகிக்க முடியாதது.

4. ஒரு நாட்டின் பழக்க வழக்கம் மற்றொரு நாட்டில் அநாகரிகமாகத் தோன்றும். நம் கிராமங்களுக்கு ஆங்கிலேயர் அல்லது புது மனிதர் யாராவது வந்தால், அவர்களை ஏறிட்டுப் பார்ப்பது நம் கிராம மக்களின் வழக்கம். மேல் நாட்டார் கொள்கைப்படி அது மிகக் கெட்ட வழக்கம். பிறர்க்கு எவ்விதத்திலும் ஊறு விளையாதிருப்பதை நல்லொழுக்கம் எனலாம். இடைஞ்சல் உண்டுபண்ண வேண்டும் என்னும் எண்ணமின்றியே சிலர் ஊறு விளைக்கின்றனர். அங்ஙனம் திபெத்தியர்களுக்கிடையில் நாங்கள் பெற்ற சில அனுபவங்களை ஈண்டு வெளியிடுவது பொருத்தமாயிருக்கும்.

5. வேற்றூர் சமைக்கும் இடத்துக்குப் போகலாகாது என்பது திபெத்தியருக்குத் தெரியாது. பச்சை மாமிசத்தைப் புசிக்கும் அம்மக்கள், ஆட்டுப் புழுக்கையில் தீ மூட்டித் தேநீர்ப் பானம் பண்ணுவதைத் தவிர, வேறு எவ்விதச் சமையலையும் அறிந்திலர். மண்ணெண்ணெய் அடுப்பு (Stove) சத்தமிட்டுக் கொண்டு எரிவது அவர்களுக்கு ஓர் அதிசயக் காட்சி; பூரி, பட்சணம், குழம்பு முதலியவைகளை நாங்கள் சமைப்பது மற்றோர் அதிசயம்; இவைகளைக் காண்பதற்காகக் கூடாரத்தைச் சுற்றிலும் வட்டமிட்டு உட்கார்ந்து கொண்டு கூடாரத் துணியையும் உயரத் தூக்கிப் பிடித்துக்கொள்ளுவார்கள். அவர்களை விரட்டி ஓட்ட முயன்றால், விவகாரம் வந்துவிடும். ஏனென்றால், அவமானப்படுத்துவதை அவர்கள் சகியார்கள். எப்பக்கம் திரும்பினாலும், திபெத்தியர் கண்கள் நம்மை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றன. ஏறிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும் அத்தனை கண்களுக்கிடையில் சமையல் வேலை எப்படியோ முடிவுறுகின்றது. இனிச் சாப்பிட வேண்டும். சென்னையிலிருந்தே தையலிலை கொண்டு போயிருந்தோம்.

இதில் உணவைப் பரிமாறிப் பிசைவது இவர்களுக்கு ஓர் ஆச்சரியம். வாயிற்போட்டு மென்று விழுங்குவதும் ஆச்சரியம். ஐம்பது கண்கள் இங்ஙனம் பார்வை யிட்டுக் கொண்டிருக்கும்போது புசிப்பது எங்ஙனம்? எச்சில் இலையை வெளியே எடுத்து எறிந்தவுடனே அவர்கள் அதை எடுத்து நக்கியும் பிய்த்தும் பார்த்தார்கள்; தங்கள் மொழியில் ஏதோ பேசிக்கொண்டு சிரித்தார்கள். அவர்கள் முன்னிலையில் நாங்கள் நதியில் நீராடுவது, துணி துவைப்பது, பல் துலக்குவது, கை கால் அலம்புவது ஆகிய அனைத்தும் அவர்களுக்கு ஆச்சரியமாகவே விளங்கின. நடையுடை பாவனைகளில் எங்களைப் போன்ற நூதனப் பிராணிகளை அவர்கள் முன்பு பார்த்ததில்லை போலும்! அவர்களோடு சண்டையிட்டுக் கொள்ளாமலும், அவர்களை பொருட்படுத்தாமலும் எங்கள் சொந்த அலுவல்களையே கவனிப்பது எங்களுக்கு ஓர் அலாதியான ஆத்தும சாதனமாய் இருந்தது.

6. தக்களக் கோட்டையில் ஒரு மலையின் உச்சியில் ஒரு பௌத்த மடாலயம் இருக்கிறது. ஐந்து மைலுக்கு அப்பாலேயே அது தென்படுகிறது. அம்மலை பார்ப்பதற்கு அதிக உயரமாயில்லையெனினும், அதில் ஏற ஏற அது வளர்ந்து கொண்டேபோகிறது. புத்தர் கோயில் தரிசனத்தின் பொருட்டும், பெரியவர்களைச் சந்தித்தற்பொருட்டும் நாங்கள் அம்மடாலயத்துக்குச் சென்றோம். மடத்தின் அலுவல்களைக் கவனிப்பவர்கள் எங்களை அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்றார்கள். பௌத்த சந்நியாசியை லாமா என்று வழங்குவது அத்தேசத்து வழக்கம். வழிகாட்டி எங்களைக் 'காசி லாமாக்கள்' என்று அறிமுகப்படுத்துகிறான். இந்தியாவினின்று போகும் சந்நியாசிகளைக் காசி லாமாக்கள் என்று அவர்கள் வழங்குகின்றார்கள். இந்தியாவுக்குப் பேர் காசி என்று அவர்கள் எண்ணுகிறார்கள். மடாலயம் முழுவதும் எங்களுக்குச் சுற்றிக் காட்டப்படுகின்றது. பார்க்கப் பார்க்கக் கட்டடம் பெருகிக்கொண்டே போகிறது. மரம் வளராத அவ்வூரில் அவ்வளவு பெரிய மரங்களை உபயோகித்து அவர்கள் மடாலயம் கட்டியிருப்பதினின்று அவர்கள் சமுதாயத்தில் அஃது எவ்வளவு முக்கிய

ஸ்தானம் வகிக்கிறதென்பது புலனாகின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்கு ஏதுவான அலுவல்களெல்லாம் அங்குக் கவனிக்கப்படுகின்றன. ஜங்பன் என்னும் அரசியல் அதிகாரியின் வீடு, மடாலயத்துடன் ஒட்டியிருக்கிறது. மடத்தில் உள்ள லாமாக்களின் அனுமதியின் பேரில் அவன் அரசாங்கக்காரியங்களை நிருவகிக்கின்றான்; மக்களும் மடத்தின் உதவியைக்கொண்டே தங்கள் சொந்த அலுவல்களை கவனிக்கின்றார்கள். கெட்ட வழியில் செல்லாது கட்டுப்படுத்துவதும் நல்வழியில் செல்லத் தூண்டுவதும் மடத்தின் செயல். அதற்கேற்பத் திபெத்திய மக்களும் பௌத்த சந்நியாசிகளிடத்தில் வைத்துள்ள பயபத்தி போற்றத் தக்கது. கல்வி கற்கும் சிறுவர்களெல்லாரும் மடத்தில் தங்கி இருந்து கற்றுவருகின்றார்கள். தக்களக் கோட்டை மடத்தில் 250 பிள்ளைகள் படிப்பதாக எங்களுக்குச் சொல்லப்பட்டது. கொஞ்ச தூரத்துக்கு அப்பால் இது போன்ற மற்றொரு நிலையம் பெண்களுக்கென்று இருக்கிறதாம். முற்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட மடங்களும் சமுதாயத் தொண்டின் பொருட்டே இருந்திருக்க வேண்டும்.

7. மடத்தினுள் வெண்ணெயின் வாடைதான் சகிக்க முடியாததாயிருக்கிறது. மக்களும் அதை உடலில் பூசிக்கொள்கின்றார்கள். குளிர் காற்றின் கொடுமையினின்றும் உடலைக்காத்தற்கு அது பெரிதும் பயன்படுகின்றது. நாங்கள் சந்நிதிக்குப் போகும்போது, பிற்பகல் ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அஃது இந்தியாவின் பழங்காலத்து மகிமையையே எங்களுக்கு ஞாபகமூட்டிற்று. பொன்போன்று மின்னுகின்ற உலோகத்தால் செய்த புத்தர் பெருமானின் பெரிய திருவுருவம் ஒன்று இருக்கிறது. அதன் எதிரே அணியணியாய் லாமாக்கள் அமர்ந்திருக்கின்றார்கள். மேள தாளம் நாதசுரம் முதலியன வாசிக்கப்படுகின்றன. பின்பு எல்லாரும் சேர்ந்து பிரார்த்தனை செய்கின்றனர். ஒருவர் பின் ஒருவராகப் புத்தர் முன்னிலையில் வணங்குகின்றனர். இக்காட்சி மனத்தைக் கவர்கின்றது. அவர்கள் வழிபாடு முடிந்ததும் நாங்கள் உள்ளே சிலையின் அருகிற்சென்று வணங்க அனுமதிக்கப்படுகிறோம். தியான

மூர்த்தியாகிய புத்தரின் சிறு சிலைகள் கணக்கற்றவை அணி யணியாக உள்ளே வைக்கப்பட்டிருக்கின்றன. பிறகு மடாதிபதியின் முன்னிலைக்கு நாங்கள் அழைத்துச்செல்லப்படு கின்றோம். அவர் எங்களை ஆசீர்வதித்துப் பிரசாதம் வழங்குகின்றார். எங்கள் கயிலை யாத்திரை இனிது முற்றுப்பெற வேண்டுமென்று அவர் ஆசி கூறினார்.

8. பாலி எழுத்தில் பௌத்த சாஸ்திரங்கள் அங்கு ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சுவரில் சித்திரங்கள் ஏராளமாக வரையப்பட்டிருக்கின்றன. சாதன வகைகள், சுவர்க்கம், நரகம், புத்தரது ஜீவியம் ஆகிய இத்தனையும் சித்திரத்தில் அடக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆராய்தற்கே பல நாள் வேண்டும். பூஜா பாத்திரங்களெல்லாம், இந்தியாவினின்று கொண்டு போகப்பட்டவைகளாம். 'ஓம் மணிபத்மே ஹூம்' என்பதை அவர்கள் சதா உச்சரிப்பதோடு தரும சக்கரம் என்னும் ஒன்றைச் சுழற்றுகின்றனர். அது தாமிரத்தால் செய்யப்பட்டது. நமது ஜபமாலைக்குப் பதிலாக அவர்கள் கையிலிருப்பதே தரும சக்கரம். தக்களக் கோட்டை மடாலயத்தில் குதிர்போன்ற வடிவுடைய ஒரு பெரிய தரும சக்கரம் இருக்கிறது. அதனுள் ஓர் ஆள் புகுந்துகொண்டு அதை ஓயாது சுழற்றிக்கொண்டிருக்கிறான். சுழற்றுக்கொரு தடவை அது மணியடிக்கிறது. 'ஓம் மணிபத்மே ஹூம்' எனும் மந்திரமும் அத்துடன் உச்சரிக்கப்படுகிறது. ஆட்கள் மாறி மாறி அதனுட் புகுந்துகொண்டு, அதை ஓயாது சுற்றிக்கொண்டிருக்கிறார்களாம். இந்தியாவின் மீதும் இந்திய மக்கள் மீதும் திபெத்தியார் பேரபிமானம் கொண்டிருப்பதற்குக் காரணம், இந்தியாவினின்று அங்குக் கொண்டு செல்லப்பட்ட புத்த மதமேயாம். புத்த மதத்தின் உயர்ந்த அம்சங்களெல்லம் ஹிந்து மதத்தைச் சார்ந்தவை என்பதை நாம் அறிய வேண்டும். மதப் பிரசாரத்தை நல்ல முறையில் செய்வதே இந்தியா உலகுக்கு அளிக்கும் நன்கொடையாகும் என்பதற்கு திபத்தே இன்றைக்குச் சான்றாய் விளங்குகின்றது.

## பயிற்சி

I. விடை தருக :—

1. தக்களக்கோட்டையின் இருப்பிடம் எது? அங்குப் பயிரிடப்படும் பொருள்கள் எவை?
2. திபெத்திய ஆடவர்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் நீ அறிந்தவற்றைக் கூறுக.
3. தக்களக்கோட்டையிற் காணப்படும் முக்கிய மிருகம் எது? அதன் உபயோகங்கள் எவை?
4. இந்திய சந்நியாசிகட்குத் திபெத்தில் வழங்கும் பெயர் எது?
5. பௌத்த சந்நியாசிகட்கு வழங்கும் பெயர் யாது?
6. திபெத்தில் ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமை அறிதல் எளிதன்று. ஏன்?
7. 'தரும சக்கரம்' என்பது என்ன?

II. எதிர்ப்பதம் தருக :—

வேனிற்காலம், அசுசி, செயற்கரிய, ஓயாது.

III. வாக்கியங்களில் அமைக்க :—

இயலாது, அரிது, அருந்துகின்றனர், கொள்கை, ஊறு, பரிமாறு, நூதனமான, அலுவல்கள், அணியணி.

IV. மூன்றும் பத்தியிலுள்ள முதலிரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக எழுதுக.

V. 'ட்சி, ச்சி' என முடியும் சொற்கள் மும்மூன்று தருக.

உதாரணம்—காட்சி, வீழ்ச்சி.

## இலக்கணம்

பெயர்ச்சொல் : பெயர்கள் எல்லாம் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகைப்படும்.

1. பொருட்பெயர் : பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயராம்.
   உதாரணம் : மனிதன், மாடு, காகம், மரம், கல்
2. இடப்பெயர் : இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயராம்.
   உதாரணம் : உலகம், நாடு, பட்டினம், ஊர், அகம்.
3. காலப்பெயர் : காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயராம்.
   உதாரணம் : வருஷம், மாதம், நாள், மணி, நிமிஷம்.
4. சினைப்பெயர் : சினையை (உறுப்பை)க் குறிக்கும் பெயர் சினைப்பெயர்.
   உதாரணம் : தலை, கால், கை, கண், இலை, பூ, காய்.
5. குணப்பெயர் : குணத்தைக் குறிக்கும் பெயர் குணப்பெயராம்.
   உதாரணம் : நன்மை, கருமை, வட்டம், நீளம், இனிப்பு, புளிப்பு.

6. தொழிற்பெயர் : தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற் பெயராம்.
உதாரணம் : ஆடல், பாடல், கூட்டம், கோவை, நினைவு, மறதி, நட்பு.

## 12. கம்ப ராமாயணம்

1. பாமாலை புனைந்து தமிழன்னைக்குத் தொண்டாற்றிய புலவர் பலர். அவர்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப் படுபவர் சிலர். இவர்களைப் பெரும் புலவர்கள் என்னலாம். கம்பர் என்னும் புலவர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர். 'கவிச் சக்கரவர்த்தி', 'கல்வியிற் பெரியர் கம்பர்', 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' எனக் கம்பரைப்பற்றி எழுந்துலவும் புகழுரைகள், இவர் பெரும் புலவர் என்பதற்குப் போதிய சான்றாம்.

2. கம்பருக்குக் கம்பநாடர், கம்பநாட்டாழ்வார் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இவர் இற்றைக்குச் சுமார் எண்ணூறு ஆண்டுகட்குமுன் மாயூரத்திற்கு அருகில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் ஆதித்தர் என்பது. இவரை உவச்சர் குலத்தவர் எனச் சிலரும், வேளாண் குலத்தவர் எனச் சிலரும் கூறுவர்.

3. கம்பர் குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை இழந்தார். அதுமுதல் இவர் சடையப்ப வள்ளல் என்ற ஒரு தனவந்தரால் ஆதரிக்கப்பட்டு வந்தார். இவர் இளமை-யிலேயே கல்வி பயின்று, கலைவாணியின் அருள் திறத்தால் தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்தார்.

4. கம்பருடைய புலமையைப் பற்றிக் கேள்வியுற்ற குலோத்துங்க சோழர், இவரை அழைத்துத் தமது அவைப் புலவராயமர்த்திக் கொண்டார். தமிழ் மொழியில் ஆர்வம் மிகுந்த சடையப்ப வள்ளலும், தமிழ் மொழியை நன்கு பயின்றிருந்த குலோத்துங்கரும், வான்மீகி முனிவரால் வடமொழியில் இயற்றப்பட்டிருந்த இராமாயணத்தைத் தமிழ்ப் பாக்களால் இயற்றியருள வேண்டுமென்று கம்பரை வேண்டிக்கொண்டனர். இவரும் அதற்கு இணங்கி, இராம கதையைப் பத்தாயிரம் தமிழ்ப்பாக்களால் பாடி முடித்தார்.

5. தாம் இயற்றிய இராமாயணத்தைக் கம்பர் அக்காலத்தில் தமிழில் வல்லவர்களாக விளங்கிவந்த தில்லை மூவாயிரவர் என்ற அந்தணர்கட்குக் காண்பித்து, அவர்களிடமிருந்து சாத்துக்கவிகள் பெற எண்ணிச் சிதம்பரத்திற்குச் சென்றார். அங்கு அவர்கள் மூவாயிரம் பேரும் ஒருங்கு சேர்ந்து இராமாயணத்தைக் கேட்ட பிறகே தங்கள் அபிப்பிராயங்களைக் கூறமுடியும் என்று தெரிவித்தார்கள்.

6. கம்பர் தில்லையில் பல நாட்கள் காத்திருந்தும் அம் மூவாயிரவரும் ஒன்று கூடியபாடில்லை. அதனால், மனம் வருந்திய நம் புலவர் பெருமான், தில்லையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கோவிந்தராசப் பெருமான் ஆலயத்திற்குச் சென்று, தமது குறையைக் கூறித் தாம் விரும்பி வந்த காரியம் நிறைவேறுமாறு அருள் புரிய வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டார். அன்று இரவு இறைவர் கம்பருடைய கனவில் தோன்றி, "அன்பனே, நாளைக் காலையில் மூவாயிரவருள் ஒருவர் வீட்டில் குழந்தையொன்று அரவு தீண்டி இறக்கும். அப்போது அவர் அனைவரும் ஒன்று கூடுவர். நீ அங்குச் சென்று உனது இராமாயணத்தில் நாகபாசப் படலத்தினின்றும் சில பாக்களைப் பாடினால், அக்குழந்தை உயிர் பெற்றெழும். அப்போது உன் விருப்பம் நிறைவேறும்," என்று கூறி மறைந்தார்.

7. மறுநாட்காலையில் கம்பர் கனவில் நிகழ்ந்தவாறே அனைத்தும் நடைபெற்றன. இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெறக் காரணமாயிருந்த கம்பருடைய இராமாயண நூலை அவ்வந்தணர்கள் கேட்டு ஆனந்தமடைந்து, அரிய சாத்துக் கவிகள் வழங்கினார்கள்.

8. அதன் பின்னர்க் கம்பர் திருவரங்கத்தை அடைந்து, அரங்கநாதர் ஆலயத்தில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் நாதமுனிகள் என்னும் திருமாலின் பத்தர் வீற்றிருந்த பேரவையில் தமது இராமாயணத்தை அரங்கேற்றினார். அதைக் கேட்ட அனைவரும் கம்பரையும் அவருடைய இராம கதையையும் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிக் கம்பருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டத்தையும் வழங்கினர்.

9. கம்ப ராமாயணம் சொற்சுவை, பொருட்சுவை மலிந்த நூல். ஒவ்வொரு தமிழ் மாணவனும், மாணவியும் அதை நன்கு பயில முற்படவேண்டும்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. கம்பர் கவித்திறம் பற்றி எழுந்த பழமொழிகள் எவை?
2. கம்பரின் பிறப்பிடமும், தந்தையார் பெயரும், குலமும் யாவை?
3. கம்பர் இளமையில் யாரால் ஆதரிக்கப்பட்டார்?
4. இராம கதையைக் கம்பர் யார் வேண்டுகோளுக்கு இணங்கி இயற்றினார்?
5. கம்பர் தம் இராம கதைக்குத் தில்லை மூவாயிரவரிடமிருந்து எவ்வாறு சாத்துக் கவிகள் பெற்றார்?
6. கம்பர் இராம கதையை எங்கே, யார் முன்னிலையில் அரங்கேற்றினார்?

II. பொருள் தருக :—

பாமாலை, புனைந்து, கட்டுத்தறி, சான்று, அருள், திறம், அவைப் புலவர், ஆர்வம், அபிப்பிராயம், விண்ணப்பம், அரவு, அரங்கேற்றம்.

III. வாக்கியங்களில் அமைக்க :—

ஆதரி, ஆர்வம், அபிப்பிராயம், விண்ணப்பம், வழங்கு.

. சம்பந்தர், கம்பராமாயணம் என்னும் சொற்கள் ஒவ்வொன்றிலும் உள்ள எழுத்துக்களால் குறைந்தபக்ஷம் நான்கு நான்கு சொற்கள் அமைக்க.

## இலக்கணம்

ஆகுபெயர் : ஒரு பொருளின் இயல்பான பெயர் அப்பொருளோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவதே ஆகு-பெயராகும்.

1. பொருளாகு பெயர் : ஒரு பொருளின் பெயர் அதனோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவது பொருளாகு பெயராம்.

உதாரணம் : மல்லிகை பூத்தது - இதில் மல்லிகை என்பது ஒரு செடியாகிய பொருளின் பெயர். அப்பெயர் அச்செடியின் உறுப்பாகிய மலரை உணர்த்தியது. ஆதலால், இது பொருளாகு பெயர் என அறிக.

2. இட ஆகு பெயர் : ஓரிடத்தின் பெயர், அவ்விடத்தோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயராம்.

உதாரணம் : ஊர் அடங்கிற்று—இதில் ஊர் என்னும் இடத்தின் பெயர் ஊரிலுள்ள மனிதரை உணர்த்தியது. ஆதலால் இஃது இடவாகு பெயர் என அறிக.

3. காலவாகு பெயர் : ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவது கால ஆகு பெயராம்.

உதாரணம் : கார் விளைந்தது—இதில் கார் என்னும் காலத்தின் பெயர், அக்காலத்தோடு சம்பந்தப்பட்ட நெற்பயிருக்கு ஆகி வந்தது. ஆதலின், இது காலவாகு பெயர் என அறிக.

## 13. ஸ்தல சுய ஆட்சி—ஜில்லா போர்டு

1. முன் வகுப்பில் ஸ்தல சுய ஆட்சியின் ஓர் அங்கமாகிய 'பஞ்சாயத்து' என்னும் கிராம ஆட்சியை பற்றிப் படித்தோம். இப் பாடத்தில் மற்றோர் அங்கமாகிய ஜில்லா ஆட்சியைப் பற்றிப் படிப்போம். மக்கள் தாங்கள் வசிக்கும் ஜில்லாக்களில் தங்களுக்கு வேண்டிய வசதிகளைத் தாங்களே அமைத்துக்கொள்வதற்கான வகையில் ஆட்சிமுறை ஒன்றை அரசியலார் அமைத்துள்ளனர். இம் முறைப்படி ஜனங்கள் அவரவர்கள் வசிக்கும் ஜில்லாக்களுக்கு இன்றியமையாத பொதுநலக் காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பும், அதிகாரமும் பெற்றுள்ளார்கள். இப் பொறுப்பை வகித்து அதிகாரத்தை ஏற்று நடத்துவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஸ்தாபனம் உண்டு. அதுவே ஜில்லா போர்டு என்பது.

2. ஜில்லா போர்டு என்பது ஜில்லாவில் வசிக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சபையாம். இச்சபையில் ஜில்லாவின் சிறுமைக்கும், பெருமைக்கும் ஏற்ப, இருபத்து நான்கு பேருக்குக் குறையாமலும், ஐம்பத்திரண்டு பேருக்கு மேற்படாமலும் அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஜில்லா வாசிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆயினும், முஸ்லிம்கள், ஆதித்திராவிடர்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், பெண்கள் ஆகியவருக்குச் சில இடங்கள் அரசாங்கத்தாரால் ஒதுக்கப்படுவதும் உண்டு. இங்ஙனம் ஒதுக்கப்படும் இடங்கள், சபையின் மொத்த அங்கத்தினர் தொகையில் காற்பங்குக்கு அதிகப்படக்கூடாது.

3. ஜில்லா போர்டு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் மூன்றாண்டுகள் மட்டுமே பதவி வகித்தல்

கூடும். சபையின் அங்கத்தினர்கள் தங்களுள் ஒரு தலைவரையும், ஓர் உபதலைவரையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். தலைவர், உபதலைவர் உட்பட எந்த அங்கத்-



தினரும் எவ்வித ஊதியமும் இன்றியே தொண்டாற்றக் கடமைப் பட்டவர். அங்கத்தினர்களுள் பெரும்பாலாரின் கருத்துக் கிணங்கத் தலைவர் சபையின் நிருவாகம் முற்றிலும் நடத்தி வைப்பார். தலைவர் இல்லாத காலங்களில் உபதலைவர் சபையின் நிருவாகத்தை ஏற்று நடத்தவேண்டியவராவர்.

4. ஜில்லா போர்டு அங்கத்தினர்க்குரிய உரிமைகள் பல. ஜில்லா போர்டு காரியாலயத்தார் செய்யவேண்டிய கடமைகளினின்றும் தவறினால், அதைத் தலைவருக்கு அறிவிப்பதும், ஜில்லாவின் எந்தப் பகுதியிலேனும் குறைபாடுகள் இருக்குமாயின் அவற்றைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவருவதும், அக்குறைபாடுகளை அகற்றுவதற்கான ஆலோசனைகள் கூறுவதும் அங்கத்தினர்களின் உரிமைகளாம். அன்றியும், சபையின் கூட்டங்களில் தாங்கள் விரும்பும் தீர்மானங்களைப் பிரேரேபிக்கும் உரிமையும், தலைவரை ஒழுங்கீனமின்றிக் கேள்விகள் கேட்கும் உரிமையும், காரியாலயத்துத் தஸ்தாவேஜிகளைக் காரியாலயம் நடைபெறும் நேரங்களில் தாங்கள் விரும்பினாற் பார்வையிடக் கூடிய உரிமையும் அங்கத்தினர்கட்கு உண்டு.

5. ஜில்லாச் சபையில் உட்சபைகள் அமைக்கப்படுவதும் உண்டு. கல்வி, கிராம அபிவிருத்தி, சுகாதாரம், மராமத்து, போக்கு வரவு சாதனங்கள் ஆகிய நான்கு வகுப்புகளுள் ஒவ்வொன்றையும் கண்காணிப்பதற்காகத் தனிக் குழுக்கள் அமைக்கப்பெறும். இக்குழுக்களில் ஜில்லா போர்டு அங்கத்தினர் அல்லாதாரும் இடம் பெறுவதுண்டு. ஆனால், அவர்கட்கு விவாதங்களில் ஒட்டு அளிக்கும் உரிமை மட்டும் இல்லை. ஒவ்வொரு குழுவிலும் ஜில்லாச் சபைத் தலைவருக்கு இடம் உண்டு. ஆனால் அக்குழுவின் அங்கத்தினர், தம்முள் ஒருவரை அக்குழுவுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்.

6. ஜில்லாச் சபையின் நிருவாகத்தை அதன் அங்கத்தினர்களும், தலைவர்களும் தாங்கள் விரும்பியவாறு நடத்துதல் இயலாது. அரசியலாரின் கொள்கைகளுக்கு விரோதமின்றியும், அவர்களுடைய சட்ட திட்டங்கட்கு உட்பட்டுமே நிருவாகம் நடைபெறுதல் வேண்டும். ஆகவே, சபைத் தலைவர் ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் தம் சபையின் வரவு செலவுகள் அடங்கிய ஆண்டறிக்கையைத் தயாரித்துச் சபையார்க்குச் சமர்ப்பித்து, அவர்களுடைய ஆமோதிப்புடன் அரசியலார்க்கு அனுப்புதல் வேண்டும். அரசியலார் விரும்பினால், ஜில்லாச் சபையைக் கலைக்கவும், சபைத் தலைவரைப் பதவியினின்று நீக்கவும் கூடும்.

7. ஜில்லாச் சபை மேலே குறிப்பிட்ட கல்வி, கிராம அபிவிருத்தி, சுகாதாரம், மராமத்து, போக்குவரவுச் சாதனங்கள் ஆகியவற்றைச் செம்மையாக்குவதற்கு வேண்டிய பணத்தை எப்படிப் பெறுகிறது? அரசியலார் குடிகளிடமிருந்து வசூலிக்கும் நில வரியினின்று குறிப்பிட்ட ஒரு தொகையை ஜில்லாச் சபையாருக்கு அளிக்கின்றனர் அன்றியும் சபையார் உத்தியோக வரி, வீட்டு வரி, யாத்ரிகர் வரி முதலிய பலவகை வரிகளை விதிக்கின்றனர். காட்டுக் குத்தகை, ஏரிகளில் மீன் பிடிக்கும் குத்தகை போன்ற முறைகளிலும் ஜில்லாச் சபைகளுக்கு வருவாய் உண்டு. இவற்றைக் கொண்டே அச்சபை தன் கடமைகளை நிறைவேற்றுகின்றது.

8. பொதுவாக அறிவும் அனுபவமும் நிறைந்த அங்கத்தினர்களும், தலைவரும் உள்ள ஜில்லாச் சபையைப் பெற்றுள்ள ஜில்லாக்கள் கல்வி, கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் முன்னேறி வருகின்றன.

பயிற்சி

I. விடை தருக :

1. 'ஜில்லா போர்டு ஸ்தாபனம்' என்பது யாது ?
2. ஜில்லாச் சபையின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் ?
3. சபையின் நிருவாகம் யாரால் எவ்வாறு நடைபெற வேண்டும் ?
4. அங்கத்தினரின் உரிமைகள் யாவை ?
5. ஜில்லாச் சபையில் எத்தனை உட்குழுக்கள் இருக்கும் ? அவை யாவை ? அவற்றின் தலைவர் யார் ?
6. ஜில்லாச் சபையின் வருவாய்கள் எவை ?
7. ஜில்லாச் சபைகளால் மாந்தர்க்கு ஏற்படும் நன்மைகள் யாவை ?

II. பொருள் தருக :—

வசதி, பொறுப்பு, இன்றியமையாத, ஸ்தாபனம், அங்கத்தினர், பதவி, தொண்டாற்றல், உரிமை, குழு.

II. வாக்கியங்களில் அமைக்க :—

வசதி, இன்றியமையாதது, ஸ்தாபனம், அங்கத்தினர், வகித்தல், உரிமை, குறைபாடு.

## இலக்கணம்

### ஆகுபெயர் (தொடர்ச்சி)

4. சினையாகு பெயர் : ஒரு சினை (உறுப்பு) யின் பெயர் அதன் முதலுக்கு ஆகி வருமாயின், அது சினையாகு பெயராம்.

உதாரணம் : வெற்றிலை நட்டான்.—இதில், வெற்றிலை என்னும் சினையின் பெயர், அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்தது. ஆதலின், இது சினையாகு பெயர்.

5. குணவாகு பெயர் : ஒரு குணத்தின் பெயர் அக்குணத்தை உடைய பொருளுக்கு ஆகி வருமாயின், அது குணவாகு பெயராம்.

உதாரணம் : வெள்ளை அடித்தான்.—இதில் வெள்ளை என்னும் குணத்தின் பெயர், அக்குணத்தையுடைய பொருளுக்கு ஆகிய பெயராம்.

6. தொழிலாகு பெயர் : ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலைக் கொண்ட பொருளுக்கு ஆகிவருமாயின், அது தொழிலாகு பெயராம்.

உதாரணம் : வற்றல் உண்டான்.—இதில் வற்றல் என்னும் தொழிற் பெயர், அத்தொழிலைக் கொண்ட பொருளுக்கு ஆகி வந்தது. ஆதலின், இது தொழிலாகு பெயராம்.

7. உவமையாகு பெயர் : உபமானத்தின் பெயர் உபமேயத்திற்கு ஆகிவருமாயின், அஃது உவமையாகு பெயராம்.

உதாரணம் : காளை வந்தான்.—இதில் காளை என்னும் உபமானத்தின் பெயர், காளை போன்ற வலிமையும் இளமையும் உடையவனை உபமேயத்திற்கு ஆகி வந்தது. ஆதலின் இஃது உவமையாகு பெயர்.

# 14. நாரை விடு தூது



நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும்நின் பேடையும்
தென்திசைக் குமரி ஆடி,
வடதிசைக்கு ஏகுவீ ராயின், எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியில் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டே,
"எங்கோன்மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி,
காலது கொண்டு மேலது தழீஇ,
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்," எனுமே.

-சத்திமுற்றப் புலவர்

# 15. வீர சிவாஜி

[திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்]

1. சிவாஜியின் நாளில் ஒரு பக்கம் மொகலாய வல்லரசு; இன்னொரு பக்கம் விஜயபுரிப் பேரரசு; வேறொரு பக்கம் பராக்கிரமம் வாய்ந்த போர்த்துகேசியர்; மற்றொரு பக்கம் சூரத்துநகரருகே கடற்படை கொண்டு சீறி நின்ற அபிஸீனியர்; போதாக் குறைக்கு வர்த்தகம் நாடி இங்கு வந்த ஆங்கிலக் கூட்டத்தார் ஒரு புறம். இவர்கள் நடுவே தனிமையாய் நின்று அனைவரையும் வாட்டி வாகை சூடினார் அவ்வீர சிவாஜி.

2. விஜயபுரி (பிஜப்பூர்) அரசின் கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சிவாஜி கைப்பற்றி வந்தபோது விஜயபுரியின் தலைசிறந்த தளகர்த்தர் ஷாஜியே. மகனாரது மிடுக்குக் கண்டு தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. 'தலைவிதிபோல ஆகிறது!' என்று விட்டுவிட்டார் ஷாஜி. சிவாஜிக்கும் ஷாஜிக்கும் பேச்சு வார்த்தைகூட இல்லை என்றே இயம்பலாம்; ஆயினும் விஜயபுரிச் சுல்தானுக்கோ ஷாஜியின்மீது பரம சந்தேகம். தனயன் செயலுக்குத் தந்தை உள்ளூர உடந்தை என்பதே சுல்தான் துணிபு.

3. சிவாஜியை மடக்க வீராதி வீரரை எல்லாம் அனுப்பினார் சுல்தான். ஆயினும், அது முடியவில்லை. சுல்தானுக்கு எழுந்தது கோபம்! அவர் ஷாஜியைக்கொண்டு சிவாஜிக்கு மதி புகட்டி ஓலை ஒன்று எழுதச் சொன்னார். அதில் ஏதும் பயனில்லை. கோபம் கொழுந்து விட்டெழுந்தது. சுல்தானே, ஷாஜியைச் சிறை செய்தார்; நடு வெயிலில் நிறுத்தினார்; சுற்றிலும் கல் சுவர் எழுப்பினார்; சிவாஜிக்குக் கடைசி ஓலையும் போக்கினார். 'நீ பிடித்த கோட்டைகளை விட்டுவிட வேண்டும்; அப்பால் வாலை மடக்கிக்கொண்டு கிடக்கவேண்டும். இல்லையானால் ஷாஜியைச் சுற்றி நாற்புறமும் சுவர் எழும்பிவிடும்; உயிருடன் ஷாஜி கல்லறைக்கு இரையாவார்,' என்பதே அந்த ஓலையின் சாரம்.

4. சிவாஜியின் நிலையோ, பரம சங்கடமாகியது. ஒன்று, சுயவரசு காணும் ஆசையைக் கட்டி வைக்க வேண்டும்; அன்றேல், பிதாவின் கோரக் கொலைக்கு ஆளாதல் வேண்டும். மதி மந்திரி போன்ற மனைவி சாயா தேவியை வினவினர் சிவாஜி. 'சுயவரசு காணுதல் சும்மா கிட்டுமா? தாரம், தந்தை, தனயர் என்று பார்க்க முடியுமோ? மிகவும் சிரமந்தான்! மக்கள் நலமும் தேச நலமும் தரும நலமும் கருதியே சுய ராஜ்ய முயற்சியில் முனைந்துள்ளோம். வேறு என்ன சொல்வேன்!' என்ருள் இத்தேவி. பின்பு அவர் தம் தாயையும் துணைவரையும் உசாவினர். 'சாயா தேவி சொன்னதே சரி,' என்றனர் அனைவரும்.



5. தந்தையாரையும் காக்கவேண்டும்; தம் குறியிலும் முனைய வேண்டும்; கோலும் முறியாமல் பாம்பும் சாகாமல் இருக்க வேண்டும் என்று அதற்குற்ற வழிகளை ஆராயலானர் அவ்வீர மகனர். சிவாஜியின் மேன்மை முன்னதாகவே மொகலாய வல்லரசுக்குத் தெரியும்; ஷாஜியின் சூரத்தனமும் தெரியும். அப்போது மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹான். தந்தையார் தனயர் இருவரையும் அணைத்துக் கொள்ள அச்சக்கரவர்த்திக்கு ஆவல் அதிகம். இருவரையும் தன்பக்கம் இழுத்துக்கொண்டால் விஜயபுரியை வென்று விடலாம்; தக்காணத்திலும் தாராளமாகத் தம் கொடி

தூக்கலாம் என்பதே டில்லி பாதுஷாவின் நினைப்பு. விஜயபுரிக்கோ, மொகலாய வல்லரசு என்றால், உள்ளூர உள்ளத்தில் உதைப்புத்தான்.

6. இந்நிலையை உணர்ந்தார் சிவாஜி; பாதுஷாவின் மைந்தரும், தக்காணக் கவர்னருமான மூஆசத்துக்கு ஒரு தூது விடுத்தார். 'ஆபத்தில் உதவினால், பின்னால் நான் உமக்குத் தக்காணத்தில் பக்கபலமாக இருப்பேன்,' என்றார். இது ரர்ஜதந்திர வாசகம். 'உடனே ஷாஜியை விடுவிக்க வேண்டும்,' என்று டில்லியிலிருந்து விஜயபுரிக்கு ஆணை பறந்தது. விஜயபுரி சுல்தான் அதனை மீறி நடப்பதெங்ஙனம்? ஷாஜி இங்ஙனம் மகனாரின் ராஜதந்திரத்தால் விடுதலை அடைந்தார்.

7. நாளடைவில் ஷாஜஹானுக்குப் பின் ஔரங்கசீபு பாதுஷா ஆனார். உடனே மொகலாய வல்லரசின் முன்னே யாரும் தலை வணங்கவேண்டி வந்தது. அதற்குச் சிவாஜி சம்மதிக்கவில்லை. சிவாஜியைச் சிதைக்க மொகலாயச் சேனைத் தலைவர், ஒருவர்பின் ஒருவராகக் கிளம்பி வந்தனர். வந்தும் சிவாஜியைப் புறங்காண முடியவில்லை. ஔரங்கசீபினிடம் பிடிவாதம் மிகுதி. ஆறு நூறாயினும் சரி, நூறு ஆறாயினுஞ் சரி, சிவாஜியை அடக்கியே தீரவேண்டுமென ஆர்ப்பரித்தார் அப் பார்த்திபர். இதை முடிக்க இந்து சேனாதிபதிகளிடம் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. ஆதலின், நெருங்கிய உறவினரான ஷெயிஷ்டகான் என்பவரை அனுப்பினார் சிவாஜி மீது. இராவணனது மூலபலம் பிரளயம்போலத் திரண்டது என்று புராணங்கள் புகலும். பாதுஷாவின் படைபலம் அனைத்தும் அவ்விதமே திரண்டெழுந்தது.

8. சிவாஜியின் கோட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக மொகலாயரின் வசமாயின. அப்பெரு வீரர் வளர்ந்த தலம், வாழ்ந்த தலம், பிதா தந்த தலம், பூனா நகரம் யாவும் ஷெயிஷ்டகான் கையில் சிக்கின. பூனாவில் புகுந்து சிவாஜி வாழ்ந்து வந்த அரண்மனையிலே ஷெயிஷ்டகான் தங்கினார். சிவாஜியைக் கொன்று அல்லது வென்று திரும்புவதாக அத்தளகர்த்தர் கங்கணம் பூண்டார். பெரு வெள்ளத்தின் முன்னே

வளைந்து கொடுத்தார் சிவாஜி. இந்த உண்மையை ஷெயிஷ்டகான் உணரவில்லை.

9. பூனு நகரை மட்டும் காவல் புரிந்து நின்ற மொகலாய வீரர் பதினுயிரவர். அந்நகருக்கு அப்பாலே எழுபதினுயிரம் பேர். இமை கொட்டாமல் உருவின கத்தியும் கையுமாக ஷெயிஷ்டகான் மாளிகையைக் காவல் புரிந்தார் ஆயிரம் பேர். சிவாஜியின் தந்திரம் உலகப் பிரசித்தம்! ஆதலின், எப்படியோ அவர் நகரினுள்ளே வந்துவிடுவார் என்பதே அச் சேனுதிபதியின் திகில். எனவே, பூனு நகருக்குள்ளே எவர் வரினும் சரி, அங்கிருந்து எவர் போயினும் சரி, தக்க கண்காணிப்பும் வேண்டும்; சோதனையும் வேண்டும் என்பது தாக்கீது. கண்ணில் எண்ணெயை ஊற்றிக்கொண்டு நிற்கின்றனர் காவலாளர்.

10. கொன்றே வென்றே திரும்புவதாக வந்துள்ள வைரியைக் குலைக்க வேண்டும். எங்ஙனம் பூனு நகரினுள் புகுவது? எவ்வளவு காவல்! எத்தனை காபந்து! என்றாலும் 'மதிவன்மையினுல் முடியாத காரியம் ஒன்று இருக்குமோ!' என்பதே சிவாஜியின் சிந்தனை. அந்நகரிலே ஓர் இந்துவின் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தது. அம்மண வினைக்குச் சீரும் சிறப்பும் கொண்டு வருவார் போலச் சிவாஜியும் இருபது வீரரும் மாலையிலே நகரினுள்ளே நுழைந்தனர். அது கண்ட காவலாளர், வழி மறித்தனர்; கேள்வி கேட்டனர்; சோதனையும் போட்டனர். விருந்துக்கு வந்துள்ள மனிதர் என்று காவலர் ஏமாந்து உள்ளே செல்ல விடுத்தனர். கலியாண ஊர்வலம் இரவிலே நடந்தது. சிவாஜியும் அவர் துணைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

11. நடுநிசியில் ஊர்வலம் முடிந்தது. எல்லோரும் உறங்கப் போயினர். பேயும் உறங்கும் நிசி! காவலாளருக்குத் தூக்கக் கலக்கம்! தாம் பிறந்து வளர்ந்த மாளிகை; ஷெயிஷ்டகான் வீடு முழுதும் மூலை முடுக்கு விடாது சிவாஜிக்கு நன்கு தெரியும். அதன் பின்புறம் சென்றார் சிவாஜி. அங்கே சமையலறைச் சுவரிலே பத்தடி உயரத்தில் ஒரு சாளரம்; ஆள்மீது ஆள் நிற்க, உயர ஏறினுர் சிவாஜி; சாளரத்தை மெதுவாகப் பெயர்த்தார்; உள்ளே குதிக்க வழி செய்-

தார். யார் முதலிலே உள்ளே குதிப்பது? சிங்கத்தின் குகைக்-குள் புகுவது அபாய நிலைமை !

12. முதன் முதலாக உள்ளே குதித்தவர் சிவாஜியே. பின்பு துணைவரும் பின்பற்றினர் அப்பெரு வீரரை. உள்ளே மினுக்கு மினுக்கு என்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது. உருவிய வாளுடன் முன்னதாகச் சென்றார் சிவாஜி; சேர்ந்-தார் ஷெயிஸ்டகானது படுக்கையறையை. மஞ்சத்தில் கிடந்த ஒரு புருஷனை அவர் இரு துண்டாக்கினார்.

13. இதற்குள் ஷெயிஷ்டகான் விழித்தெழுந்து ஓட்டம் பிடிக்கவே, சிவாஜியின் துணைவனொருவன் வாளை வீசினான்; தலை தப்பியது. கைவிரல் மட்டும் அறுப்புண்டு விழுந்தது. இதற்குள் அரவம் கேட்டு அயலறையில் இருந்த மொகலாய வீரர் பதின்மர் விரைந்து வந்தனர். வந்தும் என்ன ! அத்தனை பேரும் இரையாயினர் சிவாஜியின் வாளுக்கு. உடனே சந்தடி கிளம்பிவிட்டது. 'மாளிகைக்குள் யாரோ புகுந்துவிட்டனர் ! என்று காவல் துருப்புகள் கண் விழித்-தன. 'யார் நுழைந்தது ? யார் நுழைந்தது ?' என்று கூவிக் கொண்டே சிவாஜியும் துணைவரும் அரண்மனையை விட்டு வெளியே கிளம்பினர்.

14. மொகலாய வீரர் ஒரு திரளாயினர். திக்குக்குச் சிலராக ஓடினர். அங்கே பதுங்கி இருந்த சிவாஜியின் படை வகுப்பொன்று பலரை வெட்டிக் குவித்தது. 'இதோ சிவாஜி!' என்று சிலர் கூவினர். சிவாஜியும் அவர் துணைவரும் மேற்-கண்ட படை வகுப்புமாக ஒரு திக்கை நோக்கி இருளிலே மறைந்தனர்.

15. மற்றொரு திக்கிலே சிறிது தொலைவில் ஒரு மலை. அம்மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிநோக்கித் தீவர்த்தி-களுடன் நூற்றுக் கணக்கானவர் ஓடுவதாக மொகலாயர் அறிந்தனர். சிவாஜிதான் அவ்வழி ஓடுகிறாரென மொகலாயச் சேனை அம்மலை நோக்கிச் சென்றது.

16. வாயு வேகமாய் ஓடிய சேனை, மலையை அணுகியது. மூலைக்கு ஒருவராகத் தீவர்த்தியுடன் ஓடுகின்றனர் பகைவர் என்பதே அச்சேனை வீரரின் கருத்து. ஆதலின், அவ்வீரர், சிறுசிறு கூட்டமாய்ப் பிரிந்து, தீவர்த்தி போகுமிடம் சேர்ந்-

'தனர். அருகிற் சென்று பார்க்க, ஓர் ஆளைக்கூடக் கண்டிலர். காட்டெருமைகளின் கொம்புகளிலே தீவர்த்திகள் கட்டப்பட்டிருந்தன; அவை வெருண்டு ஓட்டம் பிடித்தன. இப்படி முந்நூறு காட்டெருமைகள் தங்கள் கொம்புகளில் தீவர்த்திகளைக் கொண்டிருந்தன. பின்புதான் போக்குக் காட்டி மயக்கிவிட்டு இப்பெரு வீரர் மறைந்துவிட்டார் என்பதை மொகலாய வீரர் அறிந்துகொண்டனர். இதற்குள் சிவாஜி வேறு திசை வழியே பத்திரமான இடமொன்று சேர்ந்து விட்டார்.

17. மறுதினம் பொழுது புலர்ந்தது. ஷெயிஸ்டகான் பட்ட பரிபவம் பலரும் அறிந்தனர். இனிமேல் பூனாவில் தங்கினால் உயிர் போய்விடும் என்று வந்த வழி நோக்கி விரைந்து சென்றுவிடுவதே மேலென ஷெயிஸ்டகான் துணிவு கொண்டார்.

18. அந்நாளிலே சூரத்து நகரம் பிரபல துறைமுகம்; இந்தியாவின் வியாபாரப் பொக்கிஷம்; மொகலாய அரசவையின் ஒரு கஜானாவுமாகும். அந்நகரைக் கருத்தில் கொண்ட சிவாஜி நகரைத் தாக்குவதாகப் போக்குக் காட்டினார். அங்கே மொகலாயப் படைகள் திரண்ட இந்நிலையில் சிவாஜி தோன்றி, மரியாதையாக வந்து காணிக்கை செலுத்தின், நகரைத் தாக்குவதில்லை என்று கவர்னருக்குச் சொன்னார். கவர்னரோ, எடுத்தார் ஓட்டம்!

19. மக்கள் என் செய்வார்! 'சிவாஜியின் நகரங்களை ஔரங்கசீபு தரை மட்டம் ஆக்கினரே! அனைவரையும் கொன்று குவித்தனரே! பழிக்குப்பழியாக நம் நகரும் அக்கதிக்கு ஆளாகுமே! கவர்னரும் ஓடி ஒளியலாயிற்றே என்று நகரமாந்தர் நடுநடுங்கினர். சிவாஜி தம் படைத் தலைவர்களை நகரினுள்ளே அனுப்பினார். மொகலாய அரசின் பண்டசாலைகளைமட்டும் அவர் கொள்ளையாடினர். அரேபியாவிலிருந்தும், 'பாரசீகத்திலிருந்தும் மொகலாயருக்கு வந்திருந்த ஆயிரம் குதிரைகளையும் கைப்பற்றினர்; பணக்காரர்களிடமிருந்து தண்டத் தீர்வை வசூலித்தனர்; ஏழை மக்களை அவர் தொந்தரவு செய்யவில்லை. ஓடிப்போன கவர்னர் இதற்கு இடையில் ஒரு சூழ்ச்சி புரிந்தான்:

பாசறையில் தனியே இருந்தார் வீரச் சிவாஜி. அப்போது ஓர் ஆள் வந்து சிவாஜியை வணங்கினான். வணங்கி எழுந்ததும் ஈட்டியை நீட்டிக்கொண்டு சிவாஜியின் மீது அவன் பாய்ந்தான். இருவருக்கும் மல் யுத்தம் நிகழ்ந்தது. சிவாஜியின் உடுப்பெல்லாம் இரத்தம். முடிவில் அக் கொலைக்காரன் சிவாஜியின் கையில் சித்திரவதைக்கு ஆளானான். சிவாஜியின் இத்தகைய வீரமும் துணிவும் நிறைந்த செயல்கள் கணக்கற்றவையாம்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. சிவாஜியின் காலத்தில் இந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது?
2. சிவாஜி தம் தந்தையாரை விஜயபுரி மன்னரின் கொடுமையினின்றும் எங்ஙனம் விடுதலை செய்தார்?
3. சிவாஜி பூனா நகரத்தினுள் எங்ஙனம் புகுந்தார்?
4. சிவாஜியும் அவர் படை வீரரும் மொகலாய வீரர் தங்களைத் தொடர்ந்து வராதபடி செய்த சூழ்ச்சி யாது?
5. சிவாஜி சூரத்து நகரை எங்ஙனம் கைப்பற்றினார்?

II. பொருள் எழுதுக :—

பராக்கிரமம், தளகர்த்தர், தனயன், மதி, சாரம், பரமசங்கடம், உசாவினார், ஆறல், தலம், இயம்பலாம்.

III. வாக்கியங்களில் அமைக்க :—

தளகர்த்தன், இயம்புதல், முனையவேண்டும், விடுதலை, சிதைக்க, கங்கணம் கட்டிக்கொண்டார்.

IV. 'வஞ்சகம்' என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களால் ஆறு வேறு சொற்கள் எழுதுக.

# 16. வான ஊர்தியின் வரலாறு

1. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணி என்னும் நூலில், "ஏமாங்கத நாட்டு மன்னனான சச்சந்தன் மீது அவனுடைய மந்திரியும் பகைவனுமான கட்டியங்காரன் போர் தொடுத்தபோது, சூலுற்றுக் குழந்தை பெறும் தறுவாயில் இருந்த தன் மனைவி விசயை என்பாளைச் சச்சந்தன் ஒரு மயிற் பொறியின்மீது அமரச்செய்து ஆகாயத்தினூடே அனுப்பி விட்டான்," என்னும் வரலாறு கூறப்படுகிறது. இது சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரின் மனக்கோட்டையினின்றும் வெளிப்போந்த கட்டுக்கதை என மதித்தனர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மாந்தர். இன்று பறக்குங் கோட்டைகள் வானத்தினூடே வாயு வேகத்தில் பல்லாயிரக் கணக்கில் பகைவர் நாட்டின் மீது பாய்ந்து சென்று பழிவாங்குகின்றன என்று பத்திரிகையில் நாம் படிக்கின்றோ-மன்றோ?

2. வானத்திலே வளியில் மிதந்து செல்ல வேண்டிய தாதலின், ஆகாயவிமானம் இலேசான பொருளைக்கொண்டு செய்யப்படுகின்றது. அதன் சிறகுகள் சுமார் 15 அல்லது 16 அடி நீளமும் 6 அல்லது 7 அடி அகலமும் உடையவையாய் இருக்கும். பக்கத்துக்கொரு சிறகுடைய விமானம் ஒற்றைச் சிறகு விமானம் எனப்படும். ஒன்றன் கீழ் ஒன்றாகப் பக்கத்துக்கு இரண்டு சிறகுகள் உள்ள விமானம் இரட்டைச் சிறகு விமானம் எனப்படும். விமானத்தின் கீழ் இரண்டு சிறு சக்கரங்கள் காணப்படும். விமானத்தின் முன் பக்கம் மின்சார விசிறி போன்ற சுழல்கை ஒன்று இருப்பதைக் காணலாம். இது விமானத்தை இயக்கும் இயந்திரத்தோடு இணைக்கப்பட்டிருக்கும்.

3. விமானத்தை இயக்குபவர் இயந்திரத்தை இயக்க ஆரம்பித்தவுடனே சுழல்கை வேகமாகச் சுழல ஆரம்பிக்கும். அப்போது விமானம் அதன் கீழ் அமைக்கப் பெற்றுள்ள சக்கரங்களின் உதவியால் சிறிது தூரம் ஓடியபின் மேலே-

கிளம்பும். மேலே கிளம்பியபின் சிறகுகளின் உதவியால் விமானம் விண்ணில் இயங்கும். பிறகு விமானத்தை இயக்குபவர் அதைத் தம் விருப்பம் போல வேகமாகவோ, மெல்லவோ செலுத்துவர். விமானத்தை விருப்பப்படி திருப்புதற்கும் செலுத்துவதற்குமான கருவிகள், விமானியின் முன் அமைக்கப்பெற்றுள்ள கைப்பிடியோடு இணைக்கப்பட்டிருக்கும். ஆதலால், விமானி கைப்பிடியை இலகுவாக இயக்கித் தம் விருப்பம்போல விமானத்தைச் செலுத்துவார்.


4. விமானங்களிற் பல வகை உண்டு. அவற்றுள் சில, மிகச் சிறியவையாயிருக்கும். இவற்றில் இருவர் அல்லது மூவர் மட்டுமே அமர்ந்து செல்ல முடியும். சில விமானங்கள் பல மக்களையும், அவர்களுடைய சாமான்களையும் ஏற்றிச் செல்லக்கூடிய இடவசதி பெற்றிருக்கும். விமானங்கள் இருவகைப்படும். அவற்றுள் நிலத்திலிருந்து கிளம்பும் விமானத்துக்கு 'ஏரோபிளேன்' என்பது பெயர். நீரிலிருந்து செல்லுவது 'ஸீபிளேன்' எனப்படும்.

5. வான ஊர்தியின் வரலாற்றைக் கவனிப்போம்: விஞ்ஞானக் கலையின் நற்கொடைகளுள் வானவூர்தியும் ஒன்று. சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் ரோஜர் பேகன் என்னும் ஒரு மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியாளர்; 'மெல்லிய உலோகத் தகட்டினால் செய்யப்பட்ட பந்து அக்கினி வாயுவால் நிரப்பப் பெற்றால் விண்ணிற்கிளம்பும் தன்மை எய்துகிறது' என்னும் உண்மையைக் கண்டறிந்தார். அவர் தாம் கண்டறிந்த உண்மையின் பயனாக, மனிதன் ஆகாயத்தினூடே செல்லக்கூடும் என்று கூறிய போது, அவரைப் பைத்தியக்காரர் என்று எல்லாரும் இகழ்ந்தனர்.

6. சில்லாண்டுகட்குப் பின்னர் இரசாயனச் சாலையொன்றில் ஆராய்ச்சி நடத்திவந்த ஜோசப் பிளாக்கு என்னும் கலாசாலை மாணவர் ஒருவர், ஒரு நாள் ஒரு பரிசோதனையை நடத்தினார். அவர் காகிதப் பையினுள் ஜல வாயுவை நிரப்பியபோது, அக்காகித உறை மேலே கிளம்பி, அறையின் கூரையில் முட்டி நின்றது; ஆயினும்,

அவர் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தாமல், அதனை அதோடு கைவிட்டார்.

7. கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் நாட்டினரான ஸ்டீபன், ஜோஸப்பு என்னும் சகோதரர் இருவரும் காற்றைவிடப் புகை இலேசானது என்னும் உண்மையைத் தற்செயலாகக் கண்டறிந்தனர். உடனே கூண்டொன்றில் புகையை நிரப்பி விட்டபோது, அக்கூண்டு கிளம்பி விண்ணில் வெகு தூரம் சென்றது. ஆனால், புகை குறைய ஆரம்பித்தபோது கூண்டு கீழே இறங்கி விடுவதைக் கண்டார்கள். எனவே, கூண்டின் கீழ்ப் புகை குறையாதிருத்தற்காக ஓர் அக்கினித் தொட்டியைக் கட்டிவிட்டுப் பரிசோதித்தார்கள்; நெருப்பு அணைந்த உடனே புகை குறைந்து, கூண்டு கீழே வந்துவிடுவதைக் கண்டார்கள். அவர்கள் அதற்குமேல் ஒன்றும் செய்யவில்லை.




8. இப்பரிசோதனையைப் பற்றி அறிந்த ரோஸியர்ஸ், ஆர்லண்ட்ஸ் என்னும் இருவர், ஒரு கூண்டில் அக்கினி வாயுவை நிரப்பி, கூண்டின் கீழே அனல் தொட்டி ஒன்றையும் அமைத்து, அதன் கீழே தொட்டி ஒன்றைத் தொங்க விட்டுத் தாம் அத்தொட்டியில் அமர்ந்து கூண்டைப் பறக்கச் செய்தனர். ஆயினும், அது சுமார் 3,000 அடி உயரம் சென்றபோது தீப்பற்றியது. கடவுளருளால் கூண்டின் கீழ் இருந்தவர் உயிர் தப்பினர்.


9. மேலே பறக்கும் கூண்டை இயக்க அனல் வாயு, ஜல வாயு ஆகிய சக்திகள் பயனற்றவையா யிருந்தமையால், வேறு தகுந்த சக்தியைக் கண்டுபிடிக்க வேண்டுவது இன்றியமையாததாயிற்று. அன்றியும் விண்ணிற் செல்லும் கூண்டை வேண்டும் திக்கில் திருப்பிச் செலுத்துவதற்கான சூக்குமத்தையும் ஆராய்ந்தறிய வேண்டியதாயிற்று.

10. பறவைகளையும், பட்டங்களையும் அனுமானங்களாய்க் கொண்டு ஸாண்டாஸ்-டுமாண்டு என்பவர்

மோட்டார் இயந்திரங்களை அமைத்து ஒரு சிறு விமானத்தைச் செய்து முடித்தார். அவரே அதில் அமர்ந்து அதைச் செலுத்தி, மக்கள் ஆச்சரியமடையும்படி செய்தார். அந்த இயந்திரங்களைச் செம்மையான முறையில் அமைப்-



பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1903-ஆம் ஆண்டில் வான ஊர்தியைச் சிறந்த முறையில் அமைத்து வெற்றிகரமாகச் செலுத்திய பெருமை வில்பர் ரைட்டு, வில்லி ரைட்டு என்ற சகோதரர்க்கே உரியதாகும்.



11. விஞ்ஞானக் கலையின் நன்கொடையான இவ்வான ஊர்தி இன்று நாகரிக நாட்டினரால் ஆக்கத் தொழிலைவிட அழித்தல் தொழில் புரிவதற்காக அறிவுத் திறனும் ஆராய்ச்சி வன்மையாலும் அதியுன்னத நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. மக்களுக்குப் போரில் இன்னல் புரிந்து நிற்கும் இவ்வான ஊர்திகள், போருக்குப் பின் இம்மண்ணுலக வாழ்க்கையை விண்ணுலக வாழ்க்கைபோல இன்ப வாழ்க்கையாக்கி வைக்கும் என்பது திண்ணமன்றோ!

### பயிற்சி

I. விடை தருக:—

1. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
2. வானவூர்தியின் அமைப்பைச் சுருக்கமாக வருணித்தெழுதுக.
3. 'ஏரோபிளேன்' என்பதற்கும் 'ஸீ பிளேன்' என்பதற்கும் உள்ள வேற்றுமை யாது?

4. ரோஜர் பேகன் கண்டறிந்த உண்மை யாது?
5. ஜோசப்பு பிளாக்கு என்பவர் கண்டறிந்த உண்மை என்ன?
6. முதல் விமானத்தைச் செய்து முடித்துத் தாமே அதை இயக்கிக் காட்டியவர் யாவர்?
7. வான ஊர்தியைச் சிறந்த முறையில் அமைத்து வெற்றி கண்ட பெருமை யாருக்கு உரியது?

II. பொருள் தருக :—

சூலுற்று, மயிற்பொறி, வளி, இயக்குதல், கலை வரலாறு, விண், எய்தும், சூக்குமம்.

III. வாக்கியங்களில் அமைக்க :—

கட்டுக்கதை, இயக்குதல், வரலாறு, விஞ்ஞானக் கலை, இகழ்ந்தனர்.

IV. 1. முதற்பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைச் சிறுவாக்கியங்களாக்குக.

2. 11-ஆம் பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைச் சிறுவாக்கியங்களாக்குக.

## இலக்கணம்

### விகுதிகள்

**ஆண்பால் பெயர் விகுதி :** அன், ஆன், மன், மான், ன் என்பன ஆண் பாலைத் தெரிவிக்கும் விகுதிகள்.

உதாரணம் :
பொன்னன் —அன்
குழையான் —ஆன்
வடமன் —மன்
கருமான் —மான்
பிறன் —ன்

**பெண்பால் பெயர் விகுதி :** அள், ஆள், ள், இ என்பன பெண் பாலைத் தெரிவிக்கும் விகுதிகள்.

உதாரணம் :
தொடியள் —அள்
இடையாள் —ஆள்
மகள் —ள்
தோழி —இ

# 17. குர் - ஆன்

1. முஹம்மது நபியவர்களின் ஆவியானது ஆண்டவன் பக்கல் அடைந்த பிறகு, அவருடைய பிரதிநிதி (கலிபா) யாக அவரோடு இடைவிடாது இருந்து வந்த அபூபக்கர் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் உயரமான மெலிந்த உருவமுடையவர்; சிறிது கூனிய முதுகினர்; ஆனால் மிகுந்த முக வசீகரமுடையவர்.

2. இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் இவர் மக்கள்பால் செல்வாக்கு மிக்க நீதிபதியாய் இருந்து வந்தார். இவர் பெருந்தனிகராயும், பெரிய வணிகராயும், நிறைந்த அறிவாளராயும் இருந்தமையால் மக்கா நகரத்து மக்களால் நன்கு மதிக்கப்பட்டு வந்தார்.

3. இவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர்த் தமது திரண்ட ஐசுவரியத்தை இஸ்லாமிய பிரசாரத்துக்காக அர்ப்பணம் செய்து விட்டார். அன்றியும் இவர் இஸ்லாத்துக்காக அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை. இவர் ஆடம்பரமற்ற வாழ்க்கையில் ஆழ்ந்த பற்றுடையவர்; எப்போதும் எளிய உடைகளையே உடுத்திருப்பார்.

4. அபூபக்கர் இஸ்லாத்துக்குப் புரிந்த தொண்டுகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது 'குர் - ஆன்' என்னும் இஸ்லாமிய வேதத்தைத் தொகுத்ததேயாகும். இவர் ஆட்சியில் இஸ்லாத்தின் பெயரால் நடைபெற்ற போர்களில் இஸ்லாமிய வேதமாகிய குர் - ஆனை மனப்பாடம் செய்து வைத்திருந்த பெரியார் பலர் இறந்து விட்டனர். இதனால், 'குர்-ஆனே மறைந்து விடுமோ!' என்னும் எண்ணம் அபூபக்கர் அவர்களுக்கு ஏற்பட்டது.

5. இறந்தவர் போக, எஞ்சி நின்ற குர் - ஆன் வல்ல பெரியார் அனைவரையும் அபூபக்கர் அழைத்தார். அவர்கள் குர் - ஆன் பாக்களை ஒவ்வொன்றாகப் பாடிக்காட்டிய பின்னர், அவை வழுவற்றனவாகக் காணப்பெற்றமையால், அப்படியே எழுதி வைக்கப்பட்டன. இவ்வாறே குர் - ஆன் பாக்கள் முற்றிலும் எழுத்துருவம் பெற்றன.

6. குர் - ஆனில் உள்ள பாக்கள் தூய கருத்துக்கள் நிறைந்தவை. அவை அவ்வப்போது ஆண்டவனால் நபி

நாயகம் அவர்கட்கு அருளப் பெற்றவை. ஒவ்வொரு பாவும் இறைவன் திருவுளங்கொண்டு அருளியபோது நபியவர்கள் அதை எழுதிவைத்துக் கொள்வது வழக்கம். இப்பாக்கள் காகிதத்திலும், தோலின்மீதும், மரப்பட்டைகளின் மீதும், பேரீந்தின் ஓலைகளிலும் எழுதப்பட்டிருந்தன. இவையெல்லாம் முஹம்மது நபியவர்களிடமே இருந்தன. ஆனால், இப்பாக்களை அவ்வப்போது நபியவர்களின் நண்பர்கள் மனப்பாடம் செய்து கொள்வது வழக்கம். குர் - ஆனைப் புத்தக வடிவமாக அளித்த அபூபக்கர் அவர்களுக்கு முஸ்லிம் உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடைப்பட்டுள்ளது.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. அபூபக்கர் என்பவர் யார்?
2. இவர் இஸ்லாத்துக்குப் புரிந்த சிறந்த தொண்டு யாது?
3. அபூபக்கரின் சிறப்பியல்புகள் யாவை?
4. குர் - ஆன் என்பது யாது? அஃது எவ்வாறு தொகுக்கப்பட்டது?

## இலக்கணம்

**பலர்பாற் பெயர் விகுதி:** அர், ஆர், மார், ர், கள் என்பன பலர்பாலை உணர்த்தும் விகுதிகளாம்.

உதாரணம் :
சிறியர்—அர்
பெரியார்—ஆர்
குருமார்—மார்
பிறர்—ர்
பெண்கள்—கள்

**ஒன்றன்பாற் பெயர் விகுதி :** து என்பது ஒன்றன்பாலை உணர்த்தும் விகுதியாகும்.

உதாரணம் : கண்ணனது—து
அது—து

**பலவின்பாற் பெயர் விகுதி :** வை, அ, கள் என்பன பலவின்பாலை உணர்த்தும் விகுதிகள்.

உதாரணம் :
அவை—வை
கண்ண—அ
பசுக்கள்—கள்

**குறிப்பு :** இ என்னும் விகுதி உயர்திணையில் ஆண்பாலையும் பெண்பாலையும் அஃறிணையில் ஒன்றன் பாலையும் உணர்த்தும்.

உதாரணம் :
வில்லி—ஆண்பால்
இன் சொல்லி—பெண்பால்
முக்காலி—ஒன்றன்பால்

**விகுதிமேல் விகுதி :** சில பெயர்ச் சொற்களில் இரண்டு விகுதிகள் வருவதும் உண்டு. அவை விகுதிக்கு மேல் விகுதி எனப்படும்.

உதாரணம் :
ஆசிரியர்—ஆசிரியர்கள்
தேவிமார்—தேவிமார்கள்

# 18. ஆறு



கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன் ;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசைதீர விளை யாடிவந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன் ;
நேய முறப்புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன் ;
நிற்க எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா. 6

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

# 19. மகாத்துமா காந்தியடிகள் சுய சரிதம்

## பள்ளிக்கூட ஞாபகங்கள்

[திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்]

1. எனக்கு மணம் நடந்தபோது உயர்தரப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்ததாக முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள் சகோதரர்கள் மூவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தோம். மூத்தவர் என்னைவிட நிரம்பப் பெரிய வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். என்னுடன் மணம் நடந்த சகோதரர் எனக்கடுத்த மேல் வகுப்பில் படித்தார். கலியாணத்தின் பயனாக எங்கள் இருவருக்கும் ஒரு வருஷம் வீணாயிற்று. இஃது என்னைவிட என் தமையனாருக்கு அதிக தீமையாய் முடிந்தது. அவர் படிப்பையே நிறுத்திவிட்டார். எத்தனை இளைஞர் அவருடைய கதியையே அடைகின்றனரோ இறைவனுக்கே தெரியும்! தற்போதைய இந்து சமூகம் ஒன்றிலேதான் கலியாணமும் கல்விப் பயிற்சியும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன.

2. நான் மட்டும் விடாமல் படிக்கலானேன். உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நான் மந்த புத்தியுடையவனாகக் கருதப்படவில்லை. உபாத்தியாயர்கள் என்னிடம் எப்போதும் அன்பு காட்டினார்கள். வருஷந்தோறும் பையன்களுடைய நடத்தை, கல்வி, அபிவிருத்தி இவைகளைப் பற்றிப் பெற்றோருக்கு அனுப்பப்படும் நற்சாட்சிப் பத்திரத்தில் ஒரு முறையாவது என்னைப்பற்றிக் கெடுதலாக எழுதப்படவில்லை. இரண்டாவது வகுப்புக்குப் பிறகு எனக்குப் பரிசுகள் கிடைக்கவும் ஆரம்பித்தன. ஐந்தாவது ஆறாவது வகுப்புக்களில் முறையே நான்கு ரூபாயும், பத்து ரூபாயும் உபகாரச் சம்பளம் பெற்றேன். இதன்பொருட்டு என் தகுதியைக் காட்டிலும் என் அதிர்ஷ்டத்துக்கே அதிக நன்றி செலுத்த வேண்டும். கத்தியவாரில் சோரத்துப் பகுதியிலிருந்து வந்த மாணாக்கர்களில் கெட்டிக்காரர்களுக்கென்று இந்த உபகாரச் சம்பளங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில், நாற்பது ஐம்பது பேர் உள்ள வகுப்பில் சோரத்திலிருந்து வந்தவர் பலர் இருக்க முடியாதன்றோ?

3. என்னுடைய திறமையைப் பற்றி அப்போது எனக்கே நம்பிக்கை இல்லையென்பது ஞாபகம். எனக்குப் பரிசுகளும் உபகாரச் சம்பளமும் கிடைத்த போதெல்லாம்நான் ஆச்சரியப்படுவது வழக்கம்.



4. ஆனால், என்னுடைய நடக்கையைப் பற்றி மட்டும் அதிக கவலை கொண்டிருந்தேன். நடக்கையில் ஒரு சிறு குறை ஏற்பட்டு விட்டாலும் கண்ணீர் விட்டழுவேன். உபாத்தியாயரால் கண்டிக்கப்படத் தக்க செயல் ஏதேனும் செய்துவிட்டாலோ, அல்லது அவ்வாறு உபாத்தியாயர் கருதிவிட்டாலோ என்மனம் பொறாது. முதல் வகுப்பிலோ இரண்டாம் வகுப்பிலோ படித்தபோது, ஒருமுறை நான் அடிக்கப்பட்டது நினைவிருக்கிறது. அடிபட்டதைவிட, அடிக்குத் தகுந்தவனாக நான் கருதப்பட்டது எனக்கு அதிக வருத்தத்தை அளித்தது. விம்மி விம்மி அழுதேன். ஏழாவது வகுப்பில் நான் படித்த போது மற்றொரு சம்பவம் நடந்தது : தொராப்ஜி என்பவர் அப்போது தலைமை ஆசிரியராயிருந்தார். அவர் கட்டுப்பாட்டை வலியுறுத்துபவர்; ஒழுங்கு முறைப்படி காரியம் செய்பவர்; போதனை சக்தி வாய்ந்தவர். பிள்ளைகள் அவரைப் பெரிதும் விரும்பினார்கள். தேகாப்பியாசம், கிரிக்கெட்டு ஆட்டம் இரண்டையும் மேல் வகுப்புப் பிள்ளைகளுக்கு அவர் கட்டாயமாகச்

செய்தார். இவை இரண்டையும் நான் வெறுத்தேன். கட்டாயமாக்கப்படுவதற்கு முன்பு நான் தேகாப்பியாசத்துக்கும், விளையாட்டுகளுக்கும் செல்வதேயில்லை. எனக்குள்ள இயற்கையான கூச்சம் இதற்கு ஒரு காரணமாகும். அது தவறெனஇப்போது உணர்கிறேன். தேகப் பயிற்சிக்கும் கல்விக்கும் சம்பந்தமில்லையென்று அக்காலத்தில் நினைத்தேன். ஆனால், இன்று மனப்பயிற்சியைப் போலவே உடற்பயிற்சியும் பள்ளிக்கூடத்தில் இடம் பெறவேண்டுமென அறிந்துள்ளேன்.

5. எனினும், தேகாப்பியாசம் இல்லாததால் எனக்கு அதிக தீமை ஏற்படவில்லை என்பதை இங்கே கூறவேண்டும். இதற்குக் காரணம், திறந்த வெளியில் உலாவுவதன் நன்மையைப் பற்றிப் புத்தகங்களில் நான் படித்திருந்தபடியால், தினந்தோறும் நீண்டநேரம் நடக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்ததேயாகும். இவ்வழக்கத்தின் பயனாக என் உடம்பு நல்ல உரம் பெற்றது.

6. தேகாப்பியாச வகுப்புக்குச் செல்ல நான் விரும்பாததற்கு முக்கிய காரணம், என் தந்தையாருக்குப் பணிவிடை செய்வதில் இருந்த விருப்பமாகும். பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு விரைந்து சென்று தந்தையாருக்கு ஊழியம் செய்யத் தொடங்குவேன். கட்டாயத் தேகாப்பியாசம் இவ்வூழியத்துக்குத் தடையாயிருந்தது. இக்காரணத்தைத் தெரிவித்துத் தேகாப்பியாசத்துக்கு வரவேண்டிய கட்டாயத்தினின்றும் என்னை விடுவிக்கும்படி தலைமை ஆசிரியரைக் கேட்டுக்கொண்டேன். ஆனால், அவர் என் வேண்டுகோளை மறுத்துவிட்டார். சனிக் கிழமைகளில் காலை நேரத்தில் மட்டும் பள்ளிக்கூடம் உண்டு. மாலை 4 மணிக்குத் தேகாப்பியாசத்துக்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும். ஒரு சனிக்கிழமையன்று நான் காலந்தவறிப் போனேன். என்னிடம் கடிகாரம் இல்லை. சூரியனை மேகங்கள் மறைத்திருந்தபடியால் ஏமாறிவிட்டேன்; எனவே நான் செல்வதற்குள் சிறுவர் எல்லாரும் திரும்பிவிட்டார்கள். மறுநாள் தலைமையாசிரியர் நான் வராததன் காரணங் கேட்டபோது நிகழ்ந்ததைச் சொன்னேன். அவர் நான் கூறியதை

நம்பாமல், ஓர் அணுவோ இரண்டணுவோ (இப்பொழுது நன்ருக நினைவில்லை) அபராதம் விதித்தார்.

7. பொய் கூறினேனென்பதாகத் தண்டிக்கப்பட்டேன். இஃது எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. நான் சொன்னது உண்மையென்று நிரூபிக்கவோ வழி இல்லை. வேதனை தாங்காது கதறி அழுதேன். உண்மையாளனுன ஒருவன் எச்சரிக்கையுடையவனுயு மிருத்தல் வேண்டுமென்று அப்போது உணர்ந்தேன். நான் பள்ளிக்கூடத்தில் கவலையீனமாய் நடந்துகொண்டது இந்த ஒரே முறைதான். முடிவில், அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சிறிதளவு ஞாபகமிருக்கிறது.

8. என்னுடைய தந்தையார் தாமே தலைமை ஆசிரியருக்கு எழுதியபடியால், தேகாப்பியாசத்துக்குப் போகாமலிருக்க எனக்கு முடிவில் அனுமதி கிடைக்கவே செய்தது. தேகாப்பியாசத்தை அலட்சியம் செய்ததால் எனக்கு அதிக தீமை விளையாவிடினும், மற்ருென்றை அலட்சியம் செய்ததன் பயனை இப்பொழுதும் அனுபவித்து வருகிறேன். நல்ல கையெழுத்துக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லையென்று அப்போது எவ்வாருே எனக்கு ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. இங்கிலாந்துக்குப் போகும் வரையில் அவ்வபிப்பிராயமே கொண்டிருந்தேன். பிற்காலத்தில், முக்கியமாகத் தென்னுப்பிரிக்காவில் வக்கீல்கள், தென்னுப்பிரிக்காவிலேயே பிறந்து கல்வி பயிற்சி பெற்ற இளைஞர்கள் முதலியவர்களின் அழகான கையெழுத்தைப் பார்த்தபோது நான் வெட்கமும் பச்சாதாபமும் அடைந்தேன்; அவலட்சணமான கையெழுத்தை, கல்விப்பயிற்சியின் குறைபாட்டுக்கு ஓர் அறிகுறியாகக் கொள்ளவேண்டுமென உணர்ந்தேன். பின்னுல் கையெழுத்தை விருத்திசெய்ய எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை. இளமையில் அசட்டை செய்ததன் தீய பயனை இன்றளவும் நிவர்த்தி செய்ய முடியவில்லை. சிறுவர்களும், சிறுமியர்களும் என்னுடைய உதாரணத்தை ஓர் எச்சரிக்கையாகக் கொண்டு நல்ல கையெழுத்து கல்வியின் ஓர் அவசியமான பகுதி என்பதை உணர்வார்களாக! குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக்கொடுப்பதற்கு முன்னுல் சித்திரம் வரையக்

கற்பிக்கவேண்டுமென்று நான் தற்போது அபிப்பிராயப்படு-கிறேன். பறவைகள், பூக்கள் முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்வதுபோலக் குழந்தைகள் முதலில் எழுத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டும்; பொருள்களைப் போலச் சித்திரம் வரையக் கற்றுக்கொண்ட பிறகுதான் எழுத்துக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால், அழகிய கையெழுத்துப் படியும்.

## பயிற்சி

விடை எழுதுக :—

1. காந்தியடிகள் தம் இளமையில் எதைப் பற்றி மிகுந்த கவலை கொண்டிருந்தார்?
2. அவருக்குத் தொராப்ஜி அபராதம் விதித்தபோது அவர் எதற்காக வருந்தினர்?
3. காந்தியடிகள் தேகாப்பியாச வகுப்பிற்குச் செல்ல விரும்பாததன் காரணம் யாது?
4. கையெழுத்தைப் பற்றிக் காந்தியடிகளின் அபிப்பிராயம் யாது?
5. காந்தியடிகளின் வாழ்க்கையைப் பற்றி நீ படித்த பகுதியிலிருந்து அறியப்படுவன யாவை?

## இலக்கணம்

### வேற்றுமை

**முதல்வேற்றுமை :** திரிபில்லாமலிருக்கும் பெயரே முதல் வேற்றுமையாம். இது பெரும்பாலும் கருத்தாப் பொருளில் வரும்.

உதாரணம் : இராமன் வந்தான்.

**இரண்டாம் வேற்றுமை :** இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஆகும். செயப்படுபொருளே இதன் பொருளாம்.

**தொகையும் விரியும் :** வேற்றுமை உருபுகள் சில இடங்களில் மறைந்தும், சில இடங்களில் வெளிப்படையாயும் காணப்படும். வேற்றுமை உருபு மறைந்து வரும் தொடர்மொழிகள் தொகைநிலைத்தொடர் அல்லது தொகை என்று கூறப்படும்; வெளிப்பட்டு வரும் தொடர் மொழிகள் தொகாநிலைத்தொடர் அல்லது விரி என்று கூறப்படும்.

உதாரணம் : இராமன் பாடம் படித்தான்-தொகை
இராமன் பாடத்தைப் படித்தான்-விரி

**மூன்றும் வேற்றுமை:** ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன மூன்றும் வேற்றுமை உருபுகள். கொண்டு, உடன் என்பனவும் மூன்றும் வேற்றுமைச் சொல் உருபுகளாக வரும். கருவிப்பொருளும், கருத்தாப் பொருளும், உடனிகழ்ச்சிப்பொருளும் அதன் பொருளாம்.

உதாரணம் : கல்லால் கட்டினன்—கருவி
தச்சனால் தேர் செய்யப்பட்டது—கருத்தா
தந்தையோடு மகன் வந்தான்—உடனிகழ்ச்சி

நான்காம் வேற்றுமை : கு நான்காம் வேற்றுமையின் உருபு. ஆக பொருட்டு, நிமித்தம், என்பன இதன் சொல்லுருபுகளாக வரும்.

உதாரணம் : கூலி வேலை—தொகை
கூலிக்கு வேலை—விரி

# 20. சுப்பிரமணிய பாரதியார்

1. "செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்னும் உணர்ச்சி ததும்பும் சொற்களைக் கேட்டவுடனே பாரதியாரின் நினைவு நமக்கு வருகிறது. இக்காலத்தில் பாரதியாரின் பெயரை அறியாத தமிழர் இல்லை என்றே கூறலாம்.

2. சுப்பிரமணிய பாரதியார் 1882-ஆம் ஆண்டில், திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள எட்டயபுரத்துச் சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி-யம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றினர். இவர் ஐந்தாம் ஆண்டு நிரம்புவதற்கு முன்னமே அன்னை-யாரை இழந்தார்.

3. எட்டயபுரம் ஒரு பெரிய ஜமீன். அதன் ஜமீன்-தாருக்கு ராஜா என்னும் பட்டம் வழங்கி வருகிறது. பாரதி-யாரின் தந்தையாரான சின்னசாமி ஐயர் அக்காலத்தில் இருந்த அரசரின் அவைக்களப் புலவர்களுள் ஒருவராயிருந்-தார். தமிழ் மொழியில் ஆர்வம் மிக்க அவர், தம் புதல்வருக்கு இளமையிலேயே தமிழ்ப் பயிற்சி அளித்து வந்தார். அதன் பயனாகப் பாரதியார் தமது ஒன்பதாம் வயதிலேயே பாக்கள் இயற்றும் பண்பு மிக்கவரானர். இவருடைய புகழ் பிறைச் சந்திரன் போல வளருவதாயிற்று. புலவர் பலர், அவருடைய கல்வித்திறத்தை நன்கு ஆய்ந்து அவருக்குப் பாரதி என்ற பட்டத்தை வழங்கினர். பாரதி என்னும் சொல் கலைமகள் என்னும் பொருள் உடையதாம்.

4. பாரதியாருக்குப் பதினைந்து ஆண்டுகள் நிரம்பிய போது அவருக்குச் செல்லம்மாள் என்னும் அம்மையார் திருமணம் செய்விக்கப்பட்டார். மறு ஆண்டிலேயே பாரதியார் தம் தந்தையாரை இழந்தார். அப்போது பாரதியாரின் நிலை மிகவும் பரிதபிக்கக் கூடியதாயிற்று. தாய் தந்தையர் இன்றி, வருவாயும் இன்றி, பரம்பரைச் சொத்தும் இன்றி இருந்த அவர், எட்டயபுரத்தை விட்டகன்று, வட நாடு சென்று காசியில் வாழ்ந்து வந்த தம் அத்தையாரை அடைந்தார்.



5. அவர் அங்குத் தங்கி இருந்த காலத்தில் வட மொழியை நன்கு பயின்று அலகாபாத் சர்வகலாசாலைப் பிரவேசத் தேர்வில் முதலிடம் பெற்றார். ஆயினும் பாரதியார் வடநாட்டில் நீண்ட காலம் தங்கி இருக்கவில்லை. தென்மொழியிலும் வடமொழியிலும் சிறந்து விளங்கிய அவருடைய பெருமையை அறிந்த எட்டயபுரத்து அரசர், அவரை அழைத்துத் தமது அவைக்களப் புலவராக அமர்த்திக்கொண்டார். அக்காலத்தில் அவர் பாடிய பாடல்கள் பல. அவையனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை.

6. சுதந்தர வாழ்க்கையையே தமது இலட்சியமாகக் கொண்டிருந்த பாரதியார், எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி வாழ விரும்பினார். ஆதலால், அவர் எட்டயபுரத்தில் தாம் வகித்து வந்த பதவியை விட்டுச் சென்னைக்கு வந்தார். அங்குச் சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியர் பதவி அவருக்குக் கிடைத்தது. பாரதியார் அப்பதவியையும் நெடுங்காலம் வகிக்கவில்லை.

7. 1907-ஆம் ஆண்டில் பாரதியார் இந்தியா, பால

பாரதம் என்னும் பத்திரிகைகளைத் தொடங்கி, அவற்றைத் திறம்பட நடத்திவந்தார். அப்போது சுதந்தர உணர்ச்சி ததும்ப அவர் எழுதிய கட்டுரைகளும், அவரது அரசியல் வாழ்க்கையும் பொது மக்களிடையே புத்துணர்ச்சியைக் கிளப்பி வந்ததை அரசாங்கத்தார் அறிந்து, தம் நாட்டத்தைச் சிறிது அவர்மீது செலுத்த ஆரம்பித்தனர். அப்பொழுது வட இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் தேச பத்தர் பலர் சிறையிலிடப்பட்டனர். தமக்குச் சிறை வாசம் நேரக்கூடும் என்று எண்ணிய பாரதியார், தாம் சிறையினுள் இருந்து செய்வதைவிட, வெளியிலிருந்து தம் தாய் நாட்டுக்குச் செய்யும் சேவை மிகுந்த பயனளிக்கும் என்ற முடிவுக்கு வந்தார். ஆதலால், அவர் புதுச்சேரிக்குச் சென்றார். ஆனால், அங்கு அவருடைய வாழ்க்கை இனிது நடைபெற-வில்லை; அதற்கு மாறாக இன்னல்கள் நிறைந்ததாயிற்று. ஆயினும், பாரதியார் பத்தாண்டுகள் புதுவையில் வாழ்ந்தார்.

8. 1911-ஆம் ஆண்டில் அவர் புதுவையை விட்டுத் தம் மனைவியாரின் பிறப்பிடமாகிய கீழ்க்கடையத்திற்குச் சென்று காலம் கழித்தார். அங்கு அவரது நாட்டுப்பற்றை அடக்கி வைத்துக்கொண்டிருக்க நேர்ந்ததாலும், வேட்டகத்-தில் நீண்டகாலம் தங்கியிருக்க மனம் இசையாமையாலும், உடல் நலிவுற்றமையாலும் அவர் மறுபடியும் சென்னையை அடைந்தார்.

9. சென்னையில் மீண்டும் சுதேசமித்திரன் உதவி-யாசிரியர் பதவி அவருக்குக் கிடைத்தது. அப்போது அவர் நூறு ரூபாய்க்குமேல் ஊதியம் பெற்று வந்ததாகத் தெரிகிறது. ஆனால், அதை ஒரு மாதங்கூட அவர் முழுவதும் வீட்டிற்குக் கொண்டு சென்றதில்லை. அதிற் பெரும் பாகத்தை வழி-யிலேயே எளியவர்க்கு ஈந்து உதவி புரிவது அவர் வழக்கம்.

10. அவர் சென்னையில் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். அடிக்கடி பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலுக்குச் செல்வது அவர் வழக்கம். அப்போது அங்கிருந்த யானைக்குத் தேங்காய், பழம் முதலியன கொடுப்பதுண்டு. ஒரு நாள் அவர் அதன் அருகிற் சென்றபோது, அது மதங்-கொண்டிருந்தமையால், அவரைக் கீழே தள்ளிவிட்டது.

அதனால் காயமடைந்த பாரதியார், சிறிது காலம் பாயும் படுக்கையுமாயிருந்தனர். அவர் தமிழ் மக்களின் துரதிர்ஷ்ட வசமாக 1921-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது முப்பத்தெட்டே.

11. பாரதியார் ஒப்பற்ற தேச பத்தர்; சுதந்தர உணர்ச்சி மிக்கவர். அவருடைய பாடல்களில் அவருடைய தமிழ் அன்பும், நாட்டுப் பற்றும், சுதந்தர உணர்ச்சியும் மலிந்து கிடக்கின்றன. அப்பாடல்கள் இனிய எளிய நடையில் இயன்றவை; ஓசை நயம் உடையவை. அவை தமிழ் மொழி வளர்ச்சியிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கியுள்ளன. பாரதியாரைப்போல இனிமை, ஓசை, உணர்ச்சி முதலிய உயரிய நலங்கள் திகழப் பாடக்கூடிய எவரும் இக்காலத்தில் இல்லை என்றே கூறலாம்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. சுப்பிரமணிய பாரதியாரின் தாய் தந்தையர் யாவர்?
2. பாரதியார் தம் ஒன்பதாம் ஆண்டிலேயே கவி இயற்றும் ஆற்றல் அடைந்ததற்குக் காரணம் யாது?
3. சுப்பிரமணிய பாரதியாருக்குப் பாரதி என்னும் பட்டம் ஏன் அளிக்கப்பட்டது?
4. பாரதியார் காசிக்குச் செல்லவேண்டியதன் காரணம் என்ன?
5. பாதியார் சுதந்தர உணர்ச்சி மிக்கவர் என்பதை எங்ஙனம் அறியலாம்?
6. பாரதியார் ஏன் புதுவைக்குச் சென்றார்?
7. பாரதியார் மரணத்துக்குக் காரணம் யாது?

II. பொருள் எழுதுக :—

உணர்ச்சி ததும்பும், அவைக்களம், ஆர்வம், பண்பு, ஆய்ந்து, பாரதி, வருவாய், தேர்வு, லட்சியம், நாட்டம், சேவை, நலி.

III. வாக்கியங்களில் அமைக்க :—

இழந்தார், பயிற்சி, சுதந்தரம், வசித்தல், செலுத்து, நாட்டுப் பற்று.

IV. 7-ஆம் பத்தியில் உள்ள இரண்டாம் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக்குக.